TAMIL

# GEOGRAPHY

OF THE

# TANJORE DISTRICT

தஞ்சாவூர் ஜில்லா.

For

Standard IV

BY

T. V. CHELLAPPA SASTRY, B. A., L. T.

Head Master, Late C. S. M Institution, Madras.

OFFICE OF THE REGISTRAR OF ...
N.
10 DEC 1924
MADRAS

MADRAS:

T. V. CHELLAPPA SASTRY & SONS.

1924

[...eserved] [Price 4 Annas.

TB
V.21193 N24
225590

தமிழ்

பூகோள சாஸ்திரம்

# தஞ்சாவூர் ஜில்லா.

பொதுமத்திய முறையை அநுசரித்துள்ளது.

4-வது ஸ்டாண்டர்டுக்கு உரியது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
10 DEC 1924
MADRAS

இது

முன்னிருந்த

சென்னை சர்ச் ஆப் ஸ்காட்லண்ட் மிஷன் ஹைஸ்கூலின்

ஹெட்மாஸ்டர்,

டி. வி. செல்லப்ப சாஸ்திரியார் பி. ஏ., எல். டி.,

எழுதியது.

---

சென்னை.

டி. வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு ஸன்ஸ்

வெளியிட்டது.

T. V. C. Press, Madras.

1924

225890

காப்பிரைட் ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணா 4.

# முகவுரை.

இப்பூகோள சாஸ்திரமானது, சில நாட்களுக்கு மு
கவர்ன்மெண்டார் வெளியிட்ட எலிமேண்டரி, ஸெக்கன்
பாடசாலை உபாத்தியாயர்களுக்கான குறிப்புக்களில்
டிய படிப்பின் முறையை அநுசரித்துச் சுலபமான
நடையில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றது. இன்
இதில், முன்னைய பூகோள சாஸ்திரப் புத்தகங்களில்
லல்லாமல், ஒவ்வொரு தேசத்தையும், மலைப்பிரதேச
பீடபூமிகள், சமவெளிகள் முதலிய இயற்கையா
துள்ள பல பிரிவுகளாகப்பிரித்து, அப்பிரிவுகளுள் ஒவ்
றையும் குறித்துப் பூகோள சம்பந்தமான விஷயங்கள்
பட்டுள்ளது.

மேலும், மேற்கூறிய விஷயங்கள், பூகோள சா
விஷயங்களின் காரண காரிய சம்பந்தங்களை அநுசரி
கூறப்பட்டுள்ளன. அதாவது, ஒவ்வொரு பூபாக
இயற்கையமைப்பினாலும், உருவமைப்பினாலும், அத
சீதோஷ்ணஸ்திதியும், அச் சீதோஷ்ணஸ்திதியினால்
வவ் விடத்தின் விளைபொருள்களும், அவ் விளைபொ
களைக்கொண்டு அவ்வவ்விடத்தின் வியாபாரம், ஜனெ
கம் ஆகிய இவைகள் கூறப்பட்டுள்ளன.

இதில் பூமியின் உருவத்தையும், சலனத்தையும்
துச் சுலபமான கொள்கைகள், சீதோஷ்ண மண்டல
அம்மண்டலங்களின் சீதோஷ்ண பருவகால நிலைமை
அம்மண்டலங்களின் விளைபோருள்கள், இன்னும்
திலுள்ள பூபாக ஜலபாகங்களின் இயற்கையமைப்
உருவமைப்பையும் குறித்துப் பொது விவரங்
தஞ்சாவூர் ஜில்லாவின் விவரமான விஷயங்களும்,
இவை பொது மத்திய முறையை அநுசரித்தே கூற
டுள்ளன.

இன்னுமிதில், மேற்கூறிய விஷயங்களை விளக்கு
உரிய பல படங்கள், அங்கங்கே தக்கபடி அமைக்கப்பட
ளன.

TB
U.21193
N24

## ஸ்கேலின் விவரம்.

---

உபாத்தியாயருக்குக் குறிப்பு:-தெரிந்தவைகளைக்கொண்டு ...ியாதவைகளைக் கற்பிப்பதே தக்கமுறையாதலால், அவ் ...ள் குறிக்கப்பட்ட, ஓரடிமட்டப்பலகைகளைச் சம்பா ..., அவைகளைப் பிள்ளைகளிடங் கொடுத்து, அவைகளுள் ...வான்றிலும் எத்தனைப் பிரிவுகள் இருக்கின்றன ...ன்று எண்ணிச் சொல்லும்படி கேட்க. அப்பால் அப் ...வுகள் ஒவ்வொன்றும் அங்குலம் என்றும், அம்மட்டப் ...லகை ஓரடி யென்றும் சொல்லுக. பின்பு, பிள்ளைகளிருக் ... அறையிலுள்ள மேஜை, கரும்பலகை, முதலிய பொ ...ளின் நீளம், அகலம் ஆகிய இவைகளை அம்மட்டப் ...கயால், அளந்து சொல்லும்படி கேட்க.

... கரும்பலகையில், 2 அடி நீளம், 1 அடி அகலம் உள்ள ...மேஜையை, எழுதிக்காட்டுக. அப்பால், அதே மேஜை ...ரடி நீளம், அரை அடி அகலமுள்ளதாய், அக் கரும் ...கயில் வேறொரு பக்கத்தில் எழுதிக்காட்டுக. பின்பு, ...ிரண்டு மேஜைகளையும், கவனித்துப் பார்க்கும்படி ...ளைகளுக்குச் சொல்லுக. இவ்விரண்டு மேஜைகளும் ... சிறிதாயிருப்பினும், அவை உருவத்தில் ஒன்றுதா ... அவர்கள் தெரிந்துகொள்வார்கள். பின்பு மேற்கூறிய ...லத்தைக்காட்டி, ஒரே பொருளைப் பெரிதாயும், சிறிதாயும் ...தினலும், அப்பொருளின் உருவம் மாறுபடாதென்பதைக் ... இவ்வாறே ஒரு அறையின், அல்லது ஒரு நிலத்தின், ... அகலமும், ஒரே அளவுப்படி அதிகமானலும், குறைந் ...லும், அதன் உருவம் மாறாது. உதாரணமாக 4 அங்குலம்

நீளம், 3 அங்குலம் அகலம் அளவுள்ளதாய் ஒரு மேசை[illegible]
யை கரும்பலகையில் எழுதுக. அதே மேஜையை 2 அங்கு[illegible]
லம் நீளம், $1\frac{1}{2}$ அங்குலம் அகலமுள்ளதாய் எழுதினாலு[illegible]
அல்லது, 16 அங்குலம் நீளம், 12 அங்குலம் அகலமுள்ள
தாய் எழுதினாலும், அம்மேஜையினுடைய உருவம் மாறாது.
என்றால், ஒரு பொருளின் அகலம் குறைந்தாலும் அதிக
மானாலும், அதன் உருவம் மாறாதிருப்பதற்கு அதன் நீள
மும், அதற்குத்தக்கவாறு, குறைந்தும், அதிகரித்துமிருக்க
வேண்டும்.

30 அடி நீளம், 18 அடி அகலமுள்ள ஓரறையின் உரு
வத்தை எழுதவேண்டுமென வைத்துக்கொள்வோம். கரும்
பலகையின் நீளமும், அகலமும், அவ்வறையின் நீள அக
லங்களுக்குக் குறைவாயிருப்பதால், அவ்வறையை மேல்
கூறிய அளவில் கரும்பலகையில் எழுதமுடியாது. ஆகையக்
கரும்பலகையின் ஓரங்குலம், அவ்வறையின் ஓரடியை[illegible]
குறிப்பதாக எண்ணிக்கொள்ளவேண்டும். இவ்விதம் அறை
யின் நீளமாகிய, 30 அடியைக் குறிக்க, கரும்பலகையில்
30 அங்குலம் நீளமுள்ள ஒருகோட்டை இழுத்துக்கொள்
ளவேண்டும். இவ்வாறே, அவ்வறையின் அகலமாகிய
18 அடியைக் குறிக்க, கரும்பலகையில், 18 அங்குலம் அள
வுள்ளகோடு இழுத்துக்கொள்ளவேண்டுமாதலால், அவ்வள
வுள்ள கோட்டை மேலே இழுக்கப்பட்ட கோட்டுக்குச்செங்
கோணமாக இழுத்து, மற்றைப் பக்கங்களையும் அவைக[illegible]
குச் சமதூரமாயிழுத்து, உருவத்தைப் பூர்ணம்செய்யவேண
டும். ஆனால், இவ்வாறமைந்த உருவத்தின் பரிமாணம், எழு
தினவர்களுக்குத் தெரியுமேயொழிய மற்றவர்களுக்குத்
தெரியாது. ஆதலால், இதை எல்லோருந் தெரிந்துகொள்
ளும்பொருட்டு, ஓரடிக்கு ஓரங்குலமாகவைத்து இவ்வுருவத்

லைதஎழுதினோம் என்றதைத் தெரிவிக்கவேண்டும். அதற்காக இவ்வுருவத்தின்கீழ் சுருக்கமாய் ஓரடிக்கு ஓர் அங்குலம், என்று எழுதவேண்டும். ஆனால், எப்பொழுதும், ஓரடிக்கு ஓரங்குலந்தான் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது கருத்து அன்று. ஒருகெஜத்திற்கு ஓர் அங்குலம், ஒருமயிலுக்கு, ஒரு அங்குலமெனப் பலவாருக, அளவுகளை எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறு எடுத்துக் கொள்ளும் அளவுகளுக்குத் தான் ஸ்கேல் என்று பெயர்.

## பிளான்.


ஒரு அறையின் அல்லது கட்டடத்தின், உருவத்தையும், அதன் அகல நீளங்களையும், அதன் மேல் வைத்திருக்கும் பொருள்களின் இடங்களையும், காட்டுவது தான் பிளான். ஒரு பள்ளிக்கூடத்து வகுப்பு அறையின் பிளானில் அவ்வறையின் நீளம், அகலம், சுவரின்கனம், அதிலுள்ள கதவுகள், பலகணிகள் இருக்குமிடம், இன்னும், அவ்வறையில் பிள்ளைகளுக்காக போட்டிருக்கும் டேஸ்க்குகள் உபாத்தியாயர் உட்காருவதற்காக போட்டிருக்கும் நாற்காலி, மேஜை முதலியவைகள் வியாபித்திருக்குமிடம் ஆகிய இவைகள், அப்பிளானில் எழுதியிருக்கும் ஸ்கேலின்படி குறிக்கப்பட்டிருக்கும். இதை இதன் மறுக்கத்தில் காட்டியிருக்கும் படத்தில் காணலாம்.

இவ்வாறே ஒரு ஸ்கூலின் பிளானில், அப்பள்ளிக்கூடத்தின் உருவம், நீளம், அகலம், அதில் பிள்ளைகளுக்காக வைத்திருக்கும் மேஜைகளிருக்குமிடம், கரும்பலகை, உபாத்தியாயர் உட்காருவதற்காக வைத்திருக்கும் நாற்காலி, அறையின் கதவுகள், பலகணிகள் முதலியவைகளிருக்கும் இடம், ஆகிய இவைகள் அப்பிளானில் எழுதியிருக்கும் ஸ்கேலின்படி குறிக்கப்பட்டிருக்கும். இதையும் மறுபக்கத்தில் காட்டியிருக்கும் படத்தில் காணலாம்.


ஒரு தெருவின் பிளானில், அதன் உருவம், நீளம், அகலம், அதை அடுத்த வீடுகளின் உருவம், பரிமாணம், அவ்வீடுகள் வியாபித்திருக்கும் நிலம் முதலியவைகள், அப்பிளானில் எழுதியிருக்கும் ஸ்கேலின்படி குறிக்கப்பட்டிருக்கும்.

இவ்வாறே ஒரு கிராமம், தாலூக்கா, ஜில்லா, முதலியவைகளின் பிளானும் குறிக்கப்பட்டிருக்கும். இப்பிளானுக்கு பூகோள சாஸ்திரத்தில் படமென்று பெயர். பொருள்களின் படம் அப்பொருள்களின் வடிவத்தைக் காட்டும்; ஒரு தேசத்தின் படமோ என்றால், அது, அத்தேசத்தில் உள்ள மலைகள், நதிகள், ஏரிகள் முதலியவை வியாபித்த இடங்களை அப்படத்தில் எழுதியிருக்கும் ஸ்கேலின்படி காட்டும்.

ஒரு கிராமத்தைக் குறித்த பொதுவான விஷயங்களை அறியவேண்டுமானால், அந்த கிராமத்தின் படத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். பிறகு அந்தப் படத்தைக் கொண்டு, அந்தக் கிராமத்திலுள்ள, மலை, குளம், ஆறு, இருப்புப்பாதை, ஏரி முதலியவற்றை அறியவேண்டும். அப்பால் அந்தக்கிராமத்தின் நிலங்கள், கரிசலா, செவ்வலா, களிமண்ணா, உவரா, மணற்பாங்கா, படுகையா? என்று அறிய வேண்டும். அப்பால், அந்தக் கிராமத்திற் பயிரிடப்படும் நன்செய், புன்செய், தான்யங்களை அறியவேண்டும். இன்னும், அந்தக்கிராமத்தில் உள்ளவர்கள் செய்யும் தொழில்களை அறியவேண்டும். இன்னும், அவர்கள் உடுக்கும் உடை, பேசும்பாஷை, உண்ணும் உணவு, அவர்களின் பழக்க வழக்கங்கள் ஆகிய இவைகளையும் அறியவேண்டும். மேற்கூறியவைகளைக் கூறும் புத்தகத்திற்குக் கிராம பூகோள சாஸ்திரம் என்று பெயர்.



பள்ளிக்கூடத்தின் பிளான்.




பள்ளிக்கூடத்து வகுப்பு அறையின் பிளான்.

ஜ—ஜன்னல்.
க—கதவு.

## பூமியின் திசைகள்.

ஒவ்வொரு நாளும் சூரியன் எந்தத் திசையில் உதிக்கிறது என்பதையும், எந்தத் திசையில் அஸ்தமிக்கின்றதென்பதையும், நாம் பார்க்கின்றோம். சூரியனுதிக்குந் திசைக்கு, கிழக்கு என்றும், அது அஸ்தமிக்கும் திசைக்கு மேற்கு என்றும் பெயர். நாம் சூரியனுதிக்குந் திசையைநோக்கி நின்றால், நமது வலது பக்கத்திலுள்ள திசைக்குத் தேற்கு என்றும், இடதுபக்கத்திலுள்ள திசைக்கு வடக்கு என்று பெயர்.





இன்னும், படத்தின் மேல் பக்கம் வடக்கு என்றும், கீழ்ப்பக்கம் தேற்கு என்றும், நாம் படத்தை நோக்கி நிற்கும் போது, நமது வலப்பக்கம் கிழக்கு என்றும், இடப்பக்கம் மேற்கு என்றும், அறியவேண்டும்.

மேற்கூறியவாறு, திசைகளைப் பகலில் அறிந்துகொள்ளலாம். ஆனால்,இரவில் நடுச்சமுத்திரத்தில் செல்லும்போது, மாலுமிகளுக்குச் சூரியன் கண்ணுக்குப் புலப்படாதாகையால், அப்பொழுது திசைகளை அறிவது அருமையாயிருக்கும். ஆனால் அவர்கள் காம்பஸ் என்னும் காந்தக்

கருவியைக் கொண்டு, திசைகளை அறிந்து கொள்வார்கள். இந்தக் காம்பஸ் கருவி வட்டமாயிருக்கும். அதன் மேல் தட்டில் திசைகளின் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கும். அத் தட்டின் மத்தியில், எல்லாப் பக்கங்களிலும் திரும்பக்கூடிய தாக ஒருவிதமான ஊசி ஒன்று வைக்கப்பட்டிருக்கும். காம் பஸ் எந்தப் பக்கத்திலிருந்த போதிலும், இந்த ஊசி, வடக் குத் திக்கையே நோக்கி நிற்குந்தன்மை யுடையது. இவ்வாறு மாலுமிகள், வடக்குத் திக்கைத் தெரிந்துகொண்டு, மற்றத் திக்குக்களையும் மேற்காட்டியபடி தெரிந்து கொள்வார்கள்.

## பூமி

பூமியானது, நிலமும், நீரும் சேர்ந்தது. இது ஒரு வகையான உருண்டை வடிவமுடையது. இதைப் பின்வரும் திருஷ்டாந்தங்களால் அறியலாம். நாம், சமுத்திரக்கரையில் நின்றுகொண்டு தூரத்திலிருந்து கரையை நோக்கி வரும் கப்பலைப் பார்ப்போமானால், முதலில் அக்கப்பலின் பாய் மரம் மாத்திரமே நமக்குத் தோன்றும். பிறகு அக்கப்பல், நமக்குச் சமீபித்து வர வர, அதனடிப்பாகமும், நமக்குத் தோன்றும். பூமி தட்டையாயிருக்குமாயின், அக்கப்பலின் அடிப்பாகமும், நமக்கு முதலிலேயே நன்றாய்த் தோன்று




மன்றோ! அது அப்படித் தெரியாதிருப்பதால், பூமி தட்டை அன்று, அது ஒருவகையான உருண்டை வடிவமுடைய தென்று, நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

இன்னும், நாம் ஒரு பந்தை எடுத்துக் கொண்டு, அப் பந்தின் மேற்புறத்தில், பென்சலால் ஒருபுள்ளி வைத்து,

அப்புள்ளியிலிருந்து ஓரே திசையை நோக்கி, அப்பந்தின் மீது கோடிழுத்துச் சென்றால், அக்கோடு முன் குறித்த புள்ளியினிடத்திற்கே வந்து சேரும். இதற்குக் காரணம் அப்பந்து உருண்டை வடிவமாயிருப்பதேயாம். இவ்வாறே பிரயாணிகளும் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு, ஓரே திசையை நோக்கி பூமியைச் சுற்றிச்சென்று முடிவில் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்ந்ததாகச் சொல்லக் கேட்டிருக்கிறோம். இதனாலும், பூமி உருண்டை வடிவமுடையதென்பது தெளிவாகின்றது.

## சூரியன்.

இது மிகவும் பெரிதான ஓர் அக்கினிகோளம். இது





நாம் வசிக்கும் இப்பூமியைப்போல 13-லக்ஷம் மடங்கு

பெரிது. இன்னும் இது காலையில் கிழக்கிலுதித்து, மாலையில் மேற்கில் அஸ்தமிப்பதாய்த் தோன்றுவதை, நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். இதனால், பூமியைச் சூரியன் சுற்றுகின்றதெனவும், பூமி நின்ற விடத்திலே அசையாமல் நிற்கின்றதெனவும் தோன்றுகின்றது. ஆனால் அது உண்மையன்று. பூமியே சூரியனைச் சுற்றுகின்றது, இது பின் வரும் திருஷ்டாந்தத்தால் உங்களுக்குத் தெளிவாகும்.

நீங்கள் புகைவண்டிலேறிச் சென்றிருப்பீர்களே! அவ்வண்டியுடன் அதிகவேகமாய்ச்செல்லும்பொழுது, அவ்வண்டியுடன் செல்லும் உங்களுக் கிரண்டுபக்கங்களிலுமுள்ள மரங்கள், முதலியவைகள் உங்களுக்கு எதிர்த்திசையை நோக்கி வேகமாய்ச் செல்வதுபோலத் தோன்றுகின்றதல்லவா! ஆனால் உண்மையில் அவை அவ்வாறு செல்கின்றனவா? இல்லையே. புகைவண்டி மாத்திரம்தானே செல்கின்றது. அதுபோல பூமி மணி ஒன்றுக்குச் சற்றேறக்குறைய 1000 மைல்வீதம், மேற்கிலிருந்து கிழக்குமுகமாய்ச் சூரியனைச் சுற்றுவதால், பூமியோடு செல்லும் நமக்குச் சூரியன் எதிர்த்திசையாய் அதாவது கிழக்கிலிருந்து மேற்குமுகமாய்ச் செல்வதாய்த் தோன்றுகிறது. ஆனால் அது உண்மையன்று.

மேற்கூறியவாறு பூமி சூரியனைச் சுற்றுவதுடன் தானும் ஒரு பம்பரம்போல் சுழல்கிறது. இவ்வாறு பூமி சுழல்வதனால், இரவும், பகலும் உண்டாகின்றன. அது எப்படியென்றால், ஒரு விளக்கின் முன் ஒரு பம்பரத்தைச் சுழலும்படி செய்தால், அப்பம்பரத்தின், விளக்கின்முன் வரும் பாதி பக்கம் மாத்திரம், அவ்விளக்கின் ஒளியை யடைந்து பிரகாசமாயிருக்கும். அப்பம்பரத்தின் மற்றைப்பாதியில் விளக்கின் வெளிச்சம் விழாததனால், அது இருட்டாயிருக்கும். அதுபோல, பூமி தன்னில் தானே சுழன்றுகொண்டு, சூரியனைச்

சுற்றி வரும்பொழுது, அப்பூமியின் சூரியனுக் கெதிராக வரும் பாதிபாகம் பிரகாசமாகவும், மற்றைப் பாதிப்பாகம்



இருட்டாகவும் இருக்கும். இப்படி பிரகாசமாயுள்ள பூமியின் பாகத்தில் அப்போது பகல் எனவும், அதன் இருளாயுள்ள பாகத்தில் அப்போது இரவெனவும் அறியவேண்டும். பூமி தன்னில்தானே ஒருதரம் சுற்றுவதற்கு 24 மணிநேரம் வேண்டும். அது சூரியனை ஒருதரம் சுற்றுவதற்கு, $365\frac{1}{4}$ நாட்கள் வேண்டும். என்றால், பூமி தன்னைத்தானே சுற்றும் கால அளவிற்கு ஒருநாள் என்றும், அது சூரியனை ஒருதரம் சுற்றும் கால அளவிற்கு ஒரு வருஷம் என்றும் பெயர்.

கோடைக்காலமும் மாரிக்காலமும்:—பிள்ளைகளே! எப்பிரல்மாதம் முதல் அக்டோபர்மாதம் வரையில் வெயில் அதிகமாயும், அக்டோபர்மாதம் முதல், எப்பிரல் மாதம் வரையில் வெயில் அதிகமில்லாமல் குளிர் அதிகமாயும், இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். மேற்கூறியபடி,

வெயில் அதிகமாயிருக்கும் காலமாகிய ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரையிலுள்ள காலத்திற்கு கோடைக்காலமென்றும், வெயில் அதிகமில்லாமல் குளிர் அதிகமாயிருக்கும் காலமாகிய அக்டோபர் மாதம் முதல், ஏப்ரல் மாதம் வரையில் உள்ள காலத்திற்கு மாரிக்காலம் என்றும் பெயர். இன்னும், கோடைக்காலத்தில் பகல் பொழுது அதிகமாயும் இராப்பொழுது குறைவாயும், மாரிக் காலத்தில் பகல் பொழுது குறைவாயும் இராப்பொழுது அதிகமாயும் இருக்கும். இதன் விவரங்களை மேல் வகுப்பில் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.

## சீதோஷ்ணஸ்திதி.

பூமியின் மத்தியப் பிரதேசங்களில் உஷ்ணம் அதிகமாயிருக்கும். பூமியின் மத்தியிலிருந்து வடக்கிலும் தெற்கிலும் செல்லச் செல்ல, உஷ்ணம் குறைந்து கொண்டும், குளிர் அதிகரித்து கொண்டும் வரும். இன்னும் பூமியின் வடகோடியிலும், தென்கோடியிலும், குளிர் மிக்க அதிகமாயிருக்கும். அங்குள்ள நீர்ப்பாகங்களெல்லாம் உறைந்து பனிக்கட்டியாயிருக்கும். நாமிருக்கும் இந்தியா தேசமும், அதன் தென்பாகத்திலிருக்கும், நமது சென்னை ராஜதானியும், பூமியின் மத்திய பாகத்திலுள்ளது. ஆதலால், இவைகளில் உஷ்ணம் அதிகமாய் இருக்கும்.

இன்னும், கடற்கரை அடுத்த நாடுகள், கோடைக்காலத்தில் அதிக உஷ்ணமில்லாமலும், மாரிக்காலத்தில் அதிகக் குளிர்ச்சியில்லாமலும் இருக்கும். மேலும் மலைப்பிரதேசங்களான உன்னதப் பிரதேசங்கள் கோடைக் காலத்திலும் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் ஒரு தேசத்தின் சீதோஷ்ணஸ்திதியை அறியவேண்டுமானால், அத்தேசமானது, பூமியின் எந்தப் பிரதேசத்திலிருக்கிறதென்றும், அத்தேசம் உள் நாடா

அல்லது கடற்கரை அடுத்த நாடா என்றும், இன்னும் அ மலைப்பிரதேசமா அல்லது சமவெளியா? என்றும், கண்டறிய வேண்டும்.

## பூமியின் ஜீவவர்க்கங்கள்.


பூமியின் மத்திய பாகமான உஷ்ணப் பிரதேசங்களில், பெரிய உருவமும், மூர்க்ககுணமுமுள்ள பிராணிகள் விசேஷம். ஆதலால், அப்பிரதேசங்களில் யானை, கரடி, சிங்கம், எருமைக்கடா, பலவிதக் குரங்குகள், பன்றிகள், குதிரைகள், ஆடு, மாடுகள், ஒட்டகங்கள், பலவித மான்கள் ஆகிய இவைகள் விசேஷம். பூமியின் வடக்கு, தெற்குப் பாகங்களாகிய குளிர் அதிகமான பிரதேசங்களில் பிராணிகள் விசேஷமில்லை. ஆனால் திமிங்கலமும், பலஜாதி மீன்களும், வெண்கரடிகளும், வெள்ளை ஆந்தைகளும், சிற்சில வாத்துக்களுமே உள்ளன.

## பூமியின் தாவரவர்க்கங்கள்.

பூமியின் மத்திய பாகங்களாகிய உஷ்ணப் பிரதேசங்களில் பனை, ஈந்து, தெங்கு முதலியவைகளும், இன்னும் இவைகள் போன்ற வேறு பல விருக்ஷங்களும், விசேஷமாய் வளர்கின்றன. மேலுமிப் பிரதேசங்களில் மிளகு, ஜாதிக்காய், இலவங்கம், சன்ன லவங்கப்பட்டை, காப்பிக்கோட்டை, தேயிலை, வாழை, கரும்பு, நெல், திராக்ஷை, பருத்தி, புகையிலை, மூங்கில் ஆகிய இவைகள் அதிகம். இன்னும், இதில் ஆரஞ்சு, எலுமிச்சை, அத்தி, ஆப்பில், பேரிக்காய் முதலிய பழவர்க்கங்களும், கோதுமை, வாற்கோதுமை, முதலிய கதிர்த்தானியங்களும், உளுந்து, துவரை, கொள்ளு, பயறு, முதலிய காய்த்தானியங்களும் விசேஷம். பூமியின் வடகோடியானது, அதிகக் குளிர்ச்சியாதலால், அங்குள்ள நிலங்களில், கசகசா



பூமியின் தாவரவர்க்கங்கள்.



பூமியின் ஜீவவர்க்கங்கள்.

வும், தேவதாரு முதலிய சிறு விருக்ஷங்களும், பாசி முதலிய பூண்டுகளும் தவிர வேறெதுவும், விசேஷமாகப் பயிராவ தில்லை. பூமியின் தென்கோடியில் பூபாகமே இல்லை.

## மேகம், மழை, ஊற்று.

பிள்ளைகளே! நீங்கள் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை விட்டு, அப்பாத்திரத்தை அடுப்பில் வைத்துக் காய்ச்சுங்கள். அப்போது அப்பாத்திரத்திலுள்ள தண்ணீரானது, கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து வரும். இதற்குக் காரணம் என்னவென்றால், அப் பாத்திரத்திலுள்ள தண்ணீரானது, தீயின் உஷ்ணத்தால், ஆவியாய் மாறி, ஆகாயத்தில் செல்வதேயாம். அப்போது அப் பாத்திரத்தின்மேல் ஒரு பலகையை மூடினால், அப்பலகையின் உட்புறத்தில் சிறு நீர்த் துளிகள் காணப்படும். எனவே, தண்ணீர் நன்றாய்க் காய்ச்சப்பட்டால் அது, ஆவியாய் மாறும் எனவும், அது அப்பால், சற்றுக் குளிர்ச்சியடைய திரும்பவும் தண்ணீராகவே மாறுமெனவும் அறியவேண்டும். இவ்வாறே, சூரியவெப்பத்தால், சமுத்திரம் முதலிய நீர் நிலைகளிலுள்ள, தண்ணீரானது உஷ்ணமாக்கப்பட்டு ஆவியாய் மாறுகின்றது. பிறகு அந் நீராவி குளிர்ந்தால், மேகங்களாகின்றது. இம் மேகங்கள் குளிர்காற்றோடு சம்பந்தப்படுவதாலும், அல்லது மலை முதலிய குளிர்ச்சியான பிரதேசங்களுக்குச் செல்வதாலும், மழையாயாவது, பனியாயாவது மாறும்.

பூமியில் பெய்யும், மழைஜலத்தின் ஒருபாகம் பூமியின் உட்புறத்தில் பிரவேசிக்கின்றது. இவ்வாறு, செல்லும் தண்ணீரானது, திரும்பவும் பூமியின் வெடிப்புக்கள் மூலமாய், சிற்சில விடங்களில் வெளியில்வரும். தண்ணீர் இவ்வாறு வெளிக்கிளம்பி வருவதற்கு ஊற்று என்று பெயர்.

## ஏரிகளும், நதிகளும்.

பிள்ளைகளே! நீங்கள் மழை பெய்வதைப் பார்த்திருப்பீர்களல்லவா? அம்மழை நன்ருய்ப் பெய்தபிறகு, அம்மழைத்துளிகள் அநேகங்கள் ஒன்றுசேர்ந்து, பல சிறுகால்வாய்களாக ஓடும். இன்னும் வீதிகளில் பள்ளமான இடங்களில் மழைநீர் தங்கிநிற்கும். இன்னும் மேற்கூறிய சிறுகால்வாய்கள் கொஞ்சதூரம் சென்று, அப்பால் அவைகளில் அநேகம் ஒன்றுசேர்ந்து, பெருங் கால்வாய்களாக ஓடும். இன்னும் இக் கால்வாய்களெல்லாம் மேடான இடத்திலிருந்து பள்ளமான இடத்திற்கு ஓடும்.

மேற்கூறியபடி பள்ளங்களில் தேங்கியிருக்கும் நீர்ப்பாகங்களைச் சிறிய ஏரிகள் என்றும், பெரிய கால்வாய்களைச் சிறு நதிகள் என்றும், அதனேடு வந்து கலக்கும் கால்வாய்களை அவைகளின் உபநதிகள் என்றும் சொல்லலாம். எனவே, நான்கு பக்கங்களிலும் நிலத்தால் சூழப்பட்ட நீர்ப்பாகத்திற்கு ஏரி என்றுபெயர். இன்னும் பூமியின்மேற்பெய்யும் மழைஜலமானது பிரவாகமாக ஓடினல், அதற்கு நதி என்று பெயர். ஒரு பெரிய நதியில் வந்துசேரும் சிறிய நதிக்கு உபநதி என்றுபெயர். இப் பெரிய நதியிலிருந்து பிரிந்து செல்லும் சிறு நதிகளுக்கு கிளைநதிகள் என்று பெயர். நதிகள் ,உற்பத்தியாகுமிடத்திற்கு நதிமூல மென்றும், நதி கடலில் கலக்குமிடத்திற்கு முகத்துவார மென்றும் பெயர்.

இப்படிப்பட்ட நதிகளாலும், ஏரிகளாலும் பல நன்மைகளுண்டு. இவைகள் தம் பக்கங்களிலிருக்கின்ற நிலங்களில் பயிரிடுவதற்கு உபயோகமாகின்றன. இன்னும் இவை, அங்குள்ள பிராணிகளுக்குக் குடிப்பதற்கும் குளிப்பதற்கும், உபயோகப்படுகின்றன.


## பூபாகங்களும், ஜலபாகங்களும்.

பூமியில், ஜலபாகம் மூன்று பங்கும், பூபாகம் ஒரு பங்குமாம். பூமியின் பெரிய பூபாகத்திற்குக் கண்டம் என்று




பெயர். இவ்வாறு, பூமியில், ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா என்ற ஐந்து கண்டங்கள் அடங்கியுள்ளன. இவைகளுள் நாம் வசிப்பது ஆசியாகண்டம். மேற்கூறிய கண்டங்களில் அடங்கிய சிறிய பூபாகங்களுக்குத் தேசமென்று பெயர். நாம்வசிக்கும் தேசத்திற்கு, இந்துதேசம் என்று பெயர். நான்கு பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட பூபாகத்திற்குத் தீவு என்று பெயர். மூன்று பக்கங்களில் நீரால் சூழப்பட்ட பூபாகத்திற்கு தீபகற்பம் என்று பெயர். சமுத்திர மட்டத்திற்கு மேல், உயர்ந்திருக்கிற பூபாகத்திற்கு, பீடபூமி என்று பெயர். இன்னும் பூமி சமமாயிராமல், மேடு பள்ளமாய், மரம், செடி, கற்கள் அடர்ந்து மிகவும்

உன்னதமாயிருக்கும் பிரதேசத்துக்கு மலை என்றும், இவ்




வாறே அதிக உயரமில்லாமல், சற்று உயர்ந்த இடத்துக்குக்



குன்று என்றும், இரண்டு மலைகளுக்கு மிடையிலுள்ள பள்ளத்தாக்குக்குக் **கணவாய்** என்றும் பெயர்.



பூமியின் பெரிய ஜலபாகத்திற்கு மகாசமுத்திரம் என்ற பெயர். இப்படிப்பட்ட சமுத்திரங்கள் அட்லாண்டிக், பஸிபிக், ஆர்க்டிக், அண்டார்டிக், இந்து என்று ஐந்துண்டு. இவைகளுள், நமது தேசத்தைச் சூழ்ந்திருப்பது இந்துமகாசமுத்திரம். மேற்கூறிய மகாசமுத்திரத்தைக் காட்டிலும், சிறிய




ஜலபாகத்திற்குக் கடல் என்று பெயர். பெரிய ஜலபாகங்களை ஒன்றுசேர்க்கும், சிறிய ஜலபாகங்களுக்கு ஜலசந்தி என்று பெயர். பெரும்பான்மை பூமியால் சூழப்பட்ட குறுகிய நீர்ப்

பாகத்திற்கு, வளைகுடா என்றும், விரிந்து பூமிக்குட் பரவி யிருக்கும், ஜலபாகத்திற்கு விரிகுடா என்றும் பெயர்.

## மனித வகுப்பு.

நாம் உலகத்திலுள்ள பல தேசங்களிற் சென்று பார்ப்போமானால், அங்கங்கே, பலவித மனிதர்களைக் காணலாம். அவர்கள், உருவத்திலும், நிறத்திலும் தலைமயிரின் வர்ணத்திலும், ஆகாரத்திலும், மண்டையின் உருவ வித்தியாசத்திலும் வேறுபட்டிருப்பார்கள். இவ்வாறு வேறு பாட்டுக்குக் காரணம், பெரும்பாலும் அந்தந்தத் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியும், மனிதர்களின் உணவுமேயாம். அதாவது உஷ்ண தேசத்திலுள்ளவர்கள் பெரும்பாலும் கறுமையாயும், குளிர்ச்சியான தேசத்திலுள்ளவர்கள் வெண்மையாயும், அதிக உஷ்ணமும், அதிகக்குளிர்ச்சியு மில்லாத தேசத்திலுள்ளவர்கள் சற்று வெண்மையாயும், சற்றுக்கறுப்பாயுமிருப்பார்கள்.

ாறு உலகத்தில் வேறுபட்டிருக்கும் மனிதர்களை ஐந்து நம் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளுள், முதலாவது கறுத்தவர் அல்லது நீகிரோஜாதியார் என்றும், இரண்டாவது சிவப்பு நிறமுடையவர்கள், அல்லது சிவப்பு இந்தியர்கள் என்றும், மூன்றாவது, பழுப்புநிறமுடையவர்கள் அல்லது மலேயர்களென்றும், நான்காவது, மஞ்சள்நிறமுடையவர்கள் அல்லது மங்கோலியர்கள் என்றும், ஐந்தாவது வெண்மை நிறமுடையவர்கள் அல்லது காகேசியர் என்றும், சொல்வார்கள். இவ்வெண்மை நிறமுடையவர்களுள், ஒரு வகை யினருக்கு ஆரியர்கள் என்று பெயர். நாமெல்லோரும் இவ்வாரியர்களைச் சேர்ந்தவர்களே. இங்குக் காட்டிய படத்தில், இவ்வைந்து வகுப்பினரையுங் காணலாம்.

நீகிரோவர்: இவர்கள் கறுப்பு நிறமாய் இருப்பார்கள். இவர்களுக்கு மயிர் சுருட்டையாயும், மூக்குச் சப்பை

யாயும் உதடு தடித்தும் இருக்கும். இவர்கள் பெரும்பான்மை ஆப்பிரிக்காகண்டத்தில் வசிக்கின்றார்கள்.



நீகிரோஜாதியார்.

சிவப்பு நிறமுடையவர்கள்: இவர்களுக்கு கன்னம் நீண்டும், மயிர் சுருட்டையில்லாமல் கறுத்து நீண்டுமிருக்கும். இன்னும் இவர்கள் தாமிரவர்ணமா யிருப்பார்கள்.

மலேயர்கள்: இவர்களுக்கு மயிர் கரடு முரடாயும், முகம் தட்டையாயும், தலை குறுகியுமிருக்கும். இன்னும் இவர்கள் மங்கின பழுப்பு நிறமுடையவர்கள். இன்னுமிவர்கள் மஞ்சள் நிறமாயும் கீழ்நோக்கிய பார்வை யுடையவர்களாயு மிருப்பார்கள்.


வெண்மை நிறமுடையவர்கள்: இவர்கள் வெண்மை நிறமாயும் அழகிற் சிறந்தவர்களாயு மிருப்பார்கள்.



சிவப்பு இந்தியர்.



மலேயர்.



மங்கோலியர்.



வெண்மை நிறமுடைய ஜாதியார்.

225560.

## தஞ்சாவூர் ஜில்லா.

நாம் வசிக்கும் இந்தியா தேசமானது, பல பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவற்றுள், நாமிருக்கும் பெரும் பிரிவுக்கு, **சென்னை இராஜதானி** யென்று பெயர். இச் சென்னை இராஜதானியும், இருபத்தைந்து ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவையாவன:—

| | | | |
|---|---|---|---|
| 1. | கஞ்சம் | 14. | மதுரை |
| 2. | விசாகப்பட்டணம் | 15. | இராமநாதபுரம் |
| 3. | கோதாவரி | 16. | திருநெல்வேலி |
| 4. | கிருஷ்ணை | 17. | சேலம் |
| 5. | குண்டூர் | 18. | கோயம்புத்தூர் |
| 6. | நெல்லூர் | 19. | நீலகிரி |
| 7. | சென்னைப்பட்டணம் | 20. | கடப்பை |
| 8. | சித்தூர் | 21. | கர்நூல் |
| 9. | வட ஆற்காடு | 22. | பல்லாரி |
| 10. | செங்கற்பட்டு | 23. | அனந்தப்பூர் |
| 11. | தென்ஆற்காடு | 24. | மலையாளம் |
| 12. | தஞ்சாவூர் | 25. | தென்கன்னடம் |
| 13. | திருச்சினப்பள்ளி | | என்பனவாம். |

இவற்றுள் நீங்களிருக்கும் ஜில்லாவிற்கு, **தஞ்சாவூர்** என்று பெயர். நீங்கள் இச் சில்லாவின் ஒவ்வோரிடத்திற்கும் போய் அங்கங்கேயுள்ள விசேஷங்களைப் பார்க்க முடியாதாகையால் இச்சில்லாவின் படத்தினால் நீங்கள் அவைகளை அறியலாம்.

இத் தஞ்சாவூர் என்னும் இடத்தில் முன் காலத்தில் **தஞ்சன்** என்னு மொரு ராக்ஷஸன் இருந்ததாகவும், அவன் மிகுந்த துஷ்டனாயிருந்தபடியால், அவனை ஸ்ரீ மகாவிஷ்ணு ஸம்ஹரித்ததாகவும் அப்பொழுது அவன், தானிருந்த ஊர்

தன் பெயரால் வழங்கி வரவேண்டுமென, அவரை வேண்ட, அவரும் அவ்வாறே செய்வதாகச் சொன்னதாகவும், அவ்வாறே அவனிருந்த இடமானது, தஞ்சாவூர் என வழங்கலாயிற்று என்பதாகவும், ஒரு கதை சொல்லுகிருர்கள்.

## எல்லைகள்.

இச் சில்லாவிற்குக் கிழக்கில் வங்காளக்குடாக்கடலும், தெற்கில் பாக்ஸ் ஜலசந்தியும், மதுரை ஜில்லாவும், மேற்கில் மதுரை ஜில்லாவும், புதுக்கோட்டை இராஜ்யமும், திருச்சினுப்பள்ளி ஜில்லாவும், வடக்கில் தென்னுற்காடு, திருச்சினுப்பள்ளி ஜில்லாக்களும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

## இயற்கையமைப்பு.

இந்த ஜில்லாமுழுமையும் ஒரு சமவெளியா யிருக்கின்றது. இதில் குன்றுகளாவது, மலைகளாவது இல்லை. இன்னும் இதில் ஓடும் காவேரி நதியும், அதன் கிளைநதிகளும் கிழக்கு முகமாய்ச் செல்வதால், இச் சில்லாவானது, ஒரு சமவெளியாயிருப்பதுடன், கிழக்குப்பக்கம் சரிவாயு மிருப்பதாக அறியவேண்டும்.

மேலும் தஞ்சாவூர் தாலூக்காவின் தென்பாகமும், மன்னுர்குடித் தாலூக்காவின் மேற்குப்பாகமும், திருத்துறைப்பூண்டித் தாலூக்காவின் தென்பாகமும், பட்டுக்கோட்டை அறந்தாங்கித் தாலூக்காக்களும் மேடாயிருக்கின்றன. ஆனுல், தஞ்சாவூருக்குச் சமீபத்திலுள்ள வல்லம் என்னும் இடமானது,சமுத்திரமட்டத்துக்குச் சற்றேறக்குறைய160 அடி உயரமுள்ளதாயிருப்பதால், அது ஒரு பீடபூமியாகின்றது. இச் சில்லாவில் காவேரிநதியும், அதன் கிளைகளும் பாயுமிடம், ஆரம்பத்தில் குறுகியும், சமுத்திரத்தை நோக்கிச் செல்லச் செல்ல, அகன்றும், முக்கோண வடிவமாயுமிரு

க்கின்றது. இந்தக் காவேரி டெல்டா, மிகவும் செழிப்புள்ளது. இன்னும் இச்சில்லாவில் கால்மீர் முனையிலிருந்து, அதிராம்பட்டணம் வரைக்கும், உள்ள கடற்கரையை யடுத்த பிரதேசம், உப்புநிலமா யிருக்கின்றது. இதற்கு வேதாரண்ய உப்புநிலம் என்று பெயர். இப்பிரதேசம் சற்றேறக்குறைய 75 மைல் தூரம் நீளமும், 4 மைல் அகலமுமுள்ளது.

## நதிகள்.

இச் சில்லாவில் ஓடும் முக்கிய நதிகள், காவேரியும், அதன் கிளைகளாகிய கொள்ளிடம், வெண்ணாறு, குடமுருட்டி, அரசலாறு, வீரசோழன் என்பவைகளாம்.

காவேரி: இதற்குத் தக்ஷிணகங்கை என்று பெயர் கூறுவதுமுண்டு. இது குடகு ராஜ்யத்திலுள்ள, பிரம்மகிரி என்னும் மலையில் தலைக்காவேரி என்னுமிடத்தில் தோன்றி, தென்கிழக்காய் மைசூர் ராஜ்யத்தில் ஓடுகின்றது. இம் மைசூர் ராஜ்யத்தில், இதில் ஸ்ரீரங்கப்பட்டணம், சிவசமுத்திரம், என்னும் இரண்டு தீவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அப்பால் இந்நதி, மைசூர் ராஜ்யத்தைத் தாண்டி, கிழக்கு மலைத்தொடர்ச்சியின் ஒரு பிளவின் மூலமாய்ச் சற்றேறக்குறைய 300 அடி உயரத்திலிருந்து கீழே விழுகின்றது. இந் நீர்வீழ்ச்சிக்குச் சிவசமுத்திர நீர்வீழ்ச்சி என்று பெயர். அப்பால் இது கொஞ்சதூரம் கிழக்குமுகமாய்ச்சென்று, பிறகு தெற்குமுகமாய்த் திரும்பி, சேலம், கோயம்புத்தூர் என்ற ஜில்லாக்களின் இடையில் எல்லையாய் ஓடி, பிறகு திரும்பவும் கிழக்குமுகமாய்த் திரும்பி, திருச்சினப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் பாய்ந்து, பல சிற்றாறுகளாகப் பிரிந்து, தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்தசீர்காழித் தாலுக்காவிலுள்ள காவேரிப் பூம்பட்டினம் என்னும் கிராமத்துக்கருகில் வங்காளக்குடாக் கடலில் சங்கமமாகின்றது. இதன் நீளம் 475-மைல். இன்

னும் இது, திருச்சினுப்பள்ளிக்குச் சமீபத்தில் இரண்டு கிளை களாகப் பிரிக்கின்றது. இதன் வடகிளைக்குக் கோள்ளிடம் (Coleroon) என்றும், தென்கிளைக்குக் காவேரி (Kaveri) என்றும் பெயர். இவ்விரண்டு கிளைகளுக்கும் மத்தியிலிருக் கும் தீவுக்கு ஸ்ரீரங்கம் (Srirangam) என்று பெயர்.

இக் காவேரியின் வடகிளையாகிய கோள்ளிடம் என் பது, இச்சில்லாவைச் சேர்ந்த தஞ்சாவூர், பாபநாசம், கும்ப கோணம், மாயவரம், சீர்காழி என்ற தாலூக்காக்களுக்கும், திருச்சினுப்பள்ளி, தென்னுற்காடு ஜில்லாக்களுக்கும் நடு எல்லையாய் ஓடி, தீவிக்கோட்டை என்னுமிடத்துக்குச் சமீ பத்தில் வங்காளக்குடாக்கடலில் விழுகின்றது. காவேரியா னது, இச்சில்லாவில் தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், மாயவரம், சீர்காழி என்ற தாலூக்காக்களின் வழியாய்ஓடி, சீர்காழித் தாலூக்காவிலுள்ள காவேரிப்பூம்பட்டணத்துக் கருகில் வங்காளக்குடாக்கடலில் விழுகின்றது. இதன் கரை யிலுள்ள முக்கியபட்டணங்கள், திருவையாறு, சுவாமிமலை, கும்பகோணம், திருவிடைமருதூர், குற்ருலம், மாயவரம், காவேரிப்பூம்பட்டினம் என்பவைகள்.

இக் காவேரி நதியில் மூன்று அணைக்கட்டுகள் ஏற்பட் டிருக்கின்றன. அவற்றுள், ஒன்று திருச்சினுப்பள்ளிக்கு மேற்கிலும், மற்ருென்று அதற்குக் கிழக்கிலும் இருக்கின் றன. கொள்ளிடத்திலும் ஒரு அணைக்கட்டு ஏற்பட்டிருக்கின் றது. இக் காவேரியின் முக்கிய உபநதிகள், பவானி, நொய் யல், அமராவதி என்பவைகளாம். அவைகளிலொன்றும் இச்சில்லாவில் ஓடவில்லை.

**விண்ணுறு:** இது காவேரியின் ஒருகிளை. இது தஞ்சா வூருக்கு வடமேற்கேயுள்ள கோவிலடி என்னும் கிராமத்திற் குச் சமீபத்தில் காவேரியினின்று பிரிந்து, தஞ்சாவூர்த்

தாலூக்கா வழியாய் ஓடி, மன்னார்குடித் தாலூக்காவிலுள்ள நீடாமங்கலம் என்னுமிடம் வழியாக, நன்னிலம் தாலூக்காவில் பிரவேசித்து, பல கிளைகளாகப் பிரிந்து, வெள்ளாறு என்னும் பெயருடன் நாகப்பட்டணம் தாலூக்காவில் புகுந்து, அத்தாலூக்காவிலுள்ள வேளாங்கண்ணி என்னும் கிராமத்துக்குச் சமீபத்தில் வங்காளக்குடாக்கடலில் விழுகின்றது. இதிலிருந்து பல கிளைகள் பிரிகின்றன. அவைகளுள் முக்கியமானவை வெட்டாறு, வடவாறு, பாமணியாறு, கோறையாறு என்பவைகளாம். இவ்விண்ணாற்றின் கரையிலுள்ள முக்கியபட்டணங்கள், தஞ்சாவூர், நீடாமங்கலம், வேளாங்கண்ணி என்பவைகளாம்.

வெட்டாறு: இது தஞ்சாவூருக்கு வடமேற்கே கள்ளப்பிரம்பூர் என்னு மிடத்துக்குச் சமீபத்தில் வெண்ணாற்றிலிருந்து பிரிந்து, தஞ்சாவூர், பாபநாசம், நன்னிலம், நாகப்பட்டணம் என்ற தாலூக்காக்களின் வழியாய் ஓடி, நாகூருக்குச் சமீபத்தில் வங்காளக்குடாக்கடலில் விழுகின்றது.

வடவாறு: இது தஞ்சாவூர் தாலூக்காவில் விண்ணாற்றிலிருந்து பிரிந்து, கிழக்காய்ச்சென்று, பாமணியாற்றில் கலக்கின்றது.

பாமணியாறு, கோரையாறு: இவை இரண்டும், மன்னார்குடித் தாலூக்காவிலுள்ள நீடாமங்கலத்துக்கு வடமேற்கேயுள்ள ஹரித்துவாரமங்கலத்தில் விண்ணாற்றினின்று பிரிந்து, மன்னார்குடி, திருத்துரைப்பூண்டி என்ற தாலூக்காக்களின் வழியாய் ஓடி, முத்துப்பேட்டையில் கடலில் சங்கமமாகின்றன. கோரையாற்றின் முக்கியபிரிவுகள், அரிச்சந்திரனாறு, முள்ளியாறு என்பவைகள். இவை திருத்துரைப்பூண்டித் தாலூக்காவின் வழியாய் ஓடி, சமுத்திர சங்கமமாகின்றன.

அரசலாறு: இதுவும் காவேரியின் ஒருகிளை. இது பாபநாசம் தாலூக்காவிலுள்ள கபிஸ்தலம் என்னு மிடத்திற்கு

மேற்கே காவேரியினின்று பிரிந்து, பாபநாசம், கும்ப கோணம், நன்னிலம் என்ற தாலூக்காக்களின் வழியாய் ஓடி, காரைக்கால் என்னுமிடத்துக்குச் சமீபத்தில் வங்காளக் குடாக்கடலில் விழுகின்றது. இவ்வாற்றின் மீதுள்ள முக் கியபட்டணங்கள், கும்பகோணம், காரைக்கால் என்பவை.

இவ் வரசலாற்றின் முக்கியகிளை நாட்டான்வாய்க்கால் என்பது. இது கும்பகோணம், நன்னிலம், காரைக்கால் என்ற இடங்களின் வழியாய் ஓடி, வங்காளக்குடாக்கடலில் விழுகின்றது.

குடமுருட்டி: இது தஞ்சாவூருக்கு வடமேற்கே திருக் காட்டிப்பள்ளி என்னுமிடத்தில் காவேரியிலிருந்து பிரிந்து, தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், நன்னிலம் என்ற தாலூக்காக்களின் வழியாய் ஓடி, வெட்டாறுடன் கலக்கின் றது. இதிலிருந்து பலகிளைகள் பிரிகின்றன. அவற்றுள் முக்கியமானவை முடிகொண்டான், திருமலைராஜன் வளப் பாறு என்பவைகளாம். இக் குடமுருட்டியின் மீதுள்ள முக் கியபட்டணங்கள், ஐயம்பேட்டை, பாபநாசம், வலங்கிமான், குடவாசல் என்பவைகளாம். இத் திருமலைராஜன் நதி பாப நாசத்துக்குமேற்கில் குடமுருட்டியிலிருந்து பிரிந்து, பாப நாசம், கும்பகோணம், நன்னிலம் என்ற தாலூக்காக்களின் வழியாய் ஓடி, வங்காளக்குடாக்கடலில் விழுகின்றது. இதன் மீதுள்ள முக்கியபட்டணங்கள் சுந்தரப்பெருமாள்கோவில், நாச்சியார்கோவில், முடிகொண்டான் என்பவைகளாம்.

முடிகொண்டான் என்பது கும்பகோணத்துக்குக் கிழக்கே நல்லூருக்குச் சமீபத்தில் குடமுருட்டியினின்று பிரிந்து, கும்பகோணம், நன்னிலம் என்ற தாலூக்காக் களின் வழியாய் ஓடி, மேற்கூறிய திருமலைராஜன் என்னும் நதியுடன் கலக்கின்றது.

வளப்பாறு: இது வலங்கிமானுக்குக் கிழக்கில் குடமுருட்டியினின்று பிரிந்து, குடவாசலுக்குக் கிழக்காய்ச் சென்று, இதன் பிரிவாகிய முத்தாறுடன் திரும்பவும் கலந்து, பாரவடையான் என்னும் பெயருடன் வாஞ்சியூருக்குச் சமீபத்தில் சமுத்திர சங்கமமாகின்றது.

வீரசோழன்: இது கும்பகோணத்துக்குக் கிழக்கே காவேரியிலிருந்து பிரிந்து, கும்பகோணம், மாயவரம் என்ற தாலூக்காக்களின் வழியாய் ஓடி, வங்காளக் குடாக்கடலில் விழுகின்றது.

## சீதோஷ்ணஸ்திதி.

இச் சில்லாவின் கடற்கரையை யடுத்த பாகங்கள், கோடைக்காலத்தில் அதிக உஷ்ணமாயும், மாரிக்காலத்தில் அதிகக் குளிர்ச்சியாயுமிரா. மற்ற உள் நாட்டுப் பிரதேசங்கள், கோடைக்காலத்தில் அதிக உஷ்ணமாயும், மாரிக்காலத்தில் அதிகக் குளிர்ச்சியாயு மிருக்கும். கோடைக்காலத்தில் இச்சில்லாவில் அதிக மழை பெய்வதில்லை. என்றாலும், இச்சில்லாவில் பாயும் காவேரியானது, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாவதாலும், அம்மலையில் கோடைக்காலத்தில் விசேஷ மழைபெய்து அக் காவேரியில் பிரவாஹம் வருவதாலும், அக் கோடைக்காலத்தில் இச்சில்லாவில் ஜல சௌக்கியம் இருக்கின்றது. இனி, மாரிக்காலத்தில் வடகிழக்குப் பருவக்காற்று வீசும்பொழுது, அதிகமழை பெய்கின்றது.

## பூசாரமும், விளைபொருள்களும்.

இச்சில்லாவின் பெரும்பான்மையான பாகத்தில், காவேரியும், அதன் கிளைகளும் பாய்வதாலும், அக்காவேரி நதியில் கோடைக்காலத்திலும், மாரிக்காலத்திலும் பிரவாஹம் வருகின்றமையாலும், இச்சில்லா, வண்டல்பாய்ந்து மிகச்செழிப்

பாயிருக்கின்றது. காவேரிடெல்டாவிலுள்ள நிலங்கள், மிகவும் சிலாக்கியமானவை. அந் நிலங்களுக்கு, காவேரியாற்றின் வண்டலே, முக்கிய எருவாகின்றமையால், அவைகளுக்கு, வேறு எருக்கள் தேவையல்ல. தஞ்சாவூர் தாலூக்காவைச் சேர்ந்த திருவையாற்றுக்குச் சமீபத்திலுள்ள நிலங்கள் மிகவும் சிலாக்கியமானவை. அறந்தாங்கி, பட்டுக்கோட்டை, மன்னார்குடி, என்ற தாலூக்காக்களிலும், தஞ்சாவூர் தாலூக்காவின் தென்பாகத்திலும், செம்மண் நிலங்கள் அதிகம். நாகப்பட்டணம், திருத்துறைப்பூண்டி என்ற தாலூக்காக்களில் கரிசல் நிலங்கள் அதிகம். இச்சில்லாவின் பெரும்பான்மையான பாகங்களுக்கு, ஆறுகளிலிருந்தே நீர் பாய்ச்சப்படுகின்றது. அவ்வாறு ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர் என்ற தாலூக்காக்களில் சில பாகங்களிலுள்ள நிலங்களுக்கு, தண்ணீர் குளங்களிலிருந்தும், கிணறுகளிலிருந்தும் பாய்ச்சப்படுகின்றது.

இன்னும் இச் சில்லாவானது, மலைகள் குன்றுகளில்லாமல் சமவெளியாயிருப்பதால், சாகுபடி செய்வதற்கு ஏற்றதாயிருக்கின்றது.

## தாவரவர்க்கங்கள்.

இச் சில்லாவில் நெல் விசேஷமாய் விளைகின்றது. இன்னும் இதில் கேழ்வரகு, சோளம், கம்பு, கரும்பு, வாழை, பலா முதலியவைகளும், புகையிலை, வெற்றிலை, அவுரி முதலியவைகளும் பயிராகின்றன. இன்னும் புளி, தேங்கு, கமுகு, இலுப்பை, மூங்கில் முதலிய விருக்ஷங்களும் விசேஷமாய் வளர்கின்றன. மேலும் கடற்கரையடுத்த நாடுகளில் சமுத்திர நீரைக்கொண்டு உப்பு விளைவிக்கப்படுகின்றது. இச் சில்லாவிலுள்ள வேதாரண்யம் உப்பளம் மிகப்பெரிது.

பாபநாசம், கும்பகோணம் என்ற தாலூக்காக்களில், வெற்றிலை விசேஷம். கேழ்வரகு, சோளம் முதலிய புன் செய்ப்பயிர்கள், தஞ்சாவூர் ஜில்லாவின் தென் பாகத்திலும், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி என்ற தாலூக்காக்களிலும் விசேஷம்.

## ஜீவவர்க்கங்கள்.

இச்சில்லாவிலுள்ள முக்கிய ஜீவவர்க்கங்கள், ஆடுமாடு களே. கால்மீர் முனைக்குச் சமீபத்தில் குதிரைகள் விசேஷம். இச் சில்லாவிலுள்ள காட்டுப் பிரதேசங்களில், நரிகளும், காட்டுப்பூனைகளும், புனுகுபூனைகளும் விசேஷம்.

## தாதுவர்க்கங்கள்.

இச் சில்லாவில் தாதுவர்க்கங்கள் விசேஷமாய் இல்லை. இச் சில்லாவின் மேற்கிலுள்ள மேட்டுப்பிரதேசங்களில் இரும்பு கொஞ்சம் கிடைக்கின்றது. வல்லத்துக்குச் சமீபத்தில் ஒருவித ஸ்படிகக்கற்கள் கிடைக்கின்றன. அவைகளைக் கொண்டு, மூக்குக் கண்ணாடிகளும், இன்னும் பலவிதச் சாமான்களும் செய்யப்படுகின்றன. இன்னும் இச் சில்லாவில் பலவிடங்களில் சுண்ணாம்புக்கல் கிடைக்கின்றது.

## கைத்தொழில்கள்.

இச் சில்லாவிலுள்ளவர்களுக்கு விவசாயமே முக்கிய தொழிலாயிருக்கின்றது. ஆயினும், வேஷ்டி, புடவைகள் நெய்தல், பாய்பின்னல், பித்தளை, வெண்கலம், ஈயம், வெள்ளி ஆகிய இந்த லோகங்களால் பாத்திரங்கள் செய்தல், ஆகிய இத்தொழில்களும் செய்யப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர், ஐயம்பேட்டை, கும்பகோணம், குற்றாலம், கொரநாடு, மாயவரம், அம்மாபேட்டை, திருவிடமருதூர் முதலான இடங்களில் நெசவுத்தொழில்கள் விசேஷம். ஐயம்பேட்டை, சீர்காழி முதலிய இடங்களில் பாய்கள் பின்னப்படுகின்றன.

கும்பகோணத்தில் ஈயப்பாத்திரங்களும், பித்தளைப் பாத்திரங்களும், நாச்சியார்கோவிலில் வெண்கலப்பாத்திரங்களும், விசேஷமாய்ச் செய்யப்படுகின்றன. நாச்சியார் கோவிலில் செய்யப்படும் வெண்கலக் கூஜாக்களும், குத்து விளக்குகளும் மிகவும் பிரசித்தி பெற்றவை. ஆணிக்காரன் சத்திரத்திலும், திருத்துரைப் பூண்டியிலும் பிரம்புக்கூடைகள் விசேஷம். இன்னும் தஞ்சாவூர், நெட்டிவேலைகளுக்கும், வீணை, தும்புரு முதலிய வாத்தியங்களுக்கும், சந்தனம், அத்தர், பில்லை, முதலிய வாசனைத்திரவியங்களுக்கும், சித்திரவேலைகளுக்கும், அப்ரகத்தால் செய்யப்பட்ட விசிறி முதலிய சாமான்களுக்கும் பெயர் பெற்றது. வல்லத்தில் மூக்குக்கண்ணாடிகளுக்கு உபயோகமான கற்கள் விசேஷம். நெல் விசேஷமாய் விளையும் இடங்களில், நெல் குத்தும் யந்திரசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. நாகப்பட்டணத்தில் தென் இந்தியா இருப்புப் பாதைக் கம்பெனியாரின் வண்டி வேலைசாலை ஏற்பட்டிருக்கின்றது. அதில் சற்றேறக்குறைய 4000 ஜனங்கள் வேலைசெய்கிறார்கள்.

## வியாபாரம்.

நமது ஜில்லாவில் அதிகமாய் விளைகிற வஸ்துக்களை அவைகள் விளையாத அயல்தேசங்களுக்கு அனுப்புவதற்கும், நமது ஜில்லாவில் விளையாத வஸ்துக்களை, அவைகள் அதிகமாய் விளைகிற தேசங்களிலிருந்து நமது ஜில்லாவுக்கு வரவழைத்துக் கொள்வதற்கும் வியாபாரம் எனப் பெயர். நமது ஜில்லாவிலிருந்து அயல்தேசங்களுக்குச் சாமான்களை அனுப்புவதற்கு ஏற்றுமதி என்றும், அயல்தேசங்களிலிருந்து நமது ஜில்லாவுக்குச் சாமான்களை வரவழைத்துக் கொள்வதற்கு, இறக்குமதி என்றும் பெயர். இவ்வாறு சாமான்களை

ஏற்றுமதி செய்வதும் இறக்குமதி செய்வதும், பெரும் பான்மை கப்பல்கள் மூலமாயே நடக்கின்றன. இவ்வாறு ஏற்றுமதி இறக்குமதி செய்யும் இடத்துக்குத் துறைமுகம் எனப் பெயர். இவ்வாறு துறைமுகங்களை உடைய பட்ட ணங்களுககுத் துறைமுகப்பட்டணங்கள் எனப் பெயர்.

நமது ஜில்லாவிலிருந்து, நெல், அரிசி, தோல், புகை யிலை, ஆடுமாடுகள் முதலியன ஏற்றுமதியாகின்றன. வெளித் தேசங்களிலிருந்து, மரங்கள், காகிதம், கண்ணாடிச் சாமான் கள், சீமைஜவுளிகள், யந்திரங்கள், கொட்டைப்பாக்கு, ஏலக்காய், இலவங்கம் முதலியன நமது ஜில்லாவில் இறக்கு மதியாகின்றன. இன்னும் பட்டுவேஷ்டிகள், புடவைகள், ஈயப்பாத்திரங்கள், பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள், ரயில் மார்க்கமாய் அநேக இடங்களுக்கு அனுப்பப்படுகின் றன. நாகப்பட்டணத்திலுள்ள மரக்காயர்கள் என்னும் ஒரு வகை மகம்மதியர்கள் வியாபாரத்தில் அதிக ஊக்கமுடைய வர்கள்.

## கல்வி.

சென்னை இராஜதானியில் கல்வி அபிவிருத்தியடைந்தி ருக்கும் ஜில்லாக்களில் இது ஒன்று. கும்பகோணத்தில் பி. ஏ. வரைக்கும் படிப்பிக்கும் ஒரு காலேஜ் இருக்கின்றது. அது சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டது. அதில் பிரதம உபாத்தி யாயர்களாயிருந்த போர்டர் துரையைப் பற்றியும், ராவ் பக தூர் கோபால் ராவ் என்பவரைப் பற்றியும் நீங்கள் யாவரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னும் மன்னார்குடியில் பி. ஏ. வரைக்கும் படிப்பிக்கும் காலேஜ் ஒன்று பாதிரிமார்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு காலேஜ்களைத் தவிர, இச் சில்லாவில் பல ஹைஸ்கூல்கள் ஏற்பட்டிருக் கின்றன. கும்பகோணத்தில் மூன்று ஹைஸ்கூல்களும்,

நாகபபட்டணம், மன்னார்குடி, சீர்காழி என்ற இடங்களில், ஒவ்வொன்றிலும் இரண்டு ஹைஸ்கூல்களும்,மாயவரம், திருவாலூர், பாபநாசம்,பொறையார், திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி என்ற இடங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு ஹைஸ்கூலும் ஏற்பட்டிருக்கின்றது. இவைகளைத்தவிர, இச் சில்லாவின் பலவிடங்களில், இன்கம்பளீட் செக்கண்டரி பாடசாலைகளும், ப்ரைமரி பாடசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன.

## ஜனங்களும், பாஷையும்.

இச்சில்லாவிலுள்ளவர்கள் இந்துக்களே. ஆயினும், மகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும் சிறுபான்மை வசிக்கின்றார்கள். இச்சில்லாவில் முக்கியமாய் வழங்கும் பாஷை தமிழ். மஹாராஷ்டிரம் என்னும் பாஷையும் சில இடங்களில் வழங்குகின்றது. இங்கிலீஷும் வழங்கிவருகின்றது.

## போக்குவரவு சாதனங்கள்.

இச்சில்லாவில் போக்குவரவிற்குத் தகுந்த சாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இச்சில்லாவிலுள்ள பல இடங்களுக்கு நல்ல ரோட்டுகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும், பல இடங்களுக்கு இருப்புப்பாதையும் செல்கின்றது. மேலும் சென்னையிலிருந்து வரும் ஒரு இருப்புப்பாதை இச்சில்லாவின் வழியாய் மதுரை, தூத்துக்குடி முதலிய இடங்களுக்குச் செல்கின்றது. இவ்விருப்புப்பாதையில் இச்சில்லாவிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள்:—ஆனைக்காரன் சத்திரம், சீர்காழி, வைத்தீச்வரன்கோவில், ஆனைதாண்டவபுரம், மாயவரம், குற்றாலம், நரசிங்கன்பேட்டை, ஆடுதுரை, திருவிடைமருதூர், கும்பகோணம், சுந்தரப்பெருமாள்கோயில், பாபநாசம், அய்யம்பேட்டை, திட்டை, தஞ்சாவூர், பூதலூர் என்பவைகளாம்.

இன்னும் தஞ்சாவூரிலிருந்து திருவாலூர் வழியாய் நாகூருக்கு, ஓர் இருப்புப்பாதைக் கிளை செல்கின்றது. இதில் இச்சில்லாவிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள்:—தஞ்சாவூர், சாலியமங்கலம், அம்மாபேட்டை, நீடாமங்கலம், கோரடாச்சேரி, திருவாலூர், அடியக்கமங்கலம், கீவலூர், சிக்கில், நாகப்பட்டணம், நாகூர் என்பவைகள்.

மேற்கூறிய இரண்டு இருப்புப்பாதைகளும் தேன் இந்தியா இருப்புப்பாதைகள். இவைகளைத் தவிர, இன்னும் இரண்டு இருப்புப்பாதைகள் இச்சில்லாவில் செல்கின்றன. இவைகளுக்குத் தஞ்சாவூர் ஜில்லாபோர்டு இருப்புப்பாதைகளெனப்பெயர். இவ்விரண்டு இருப்புப்பாதைகளுள் ஒன்று மாயவரத்திலிருந்து பேரளம், திருவாலூர் மார்க்கமாய் அறந்தாங்கிக்குச் செல்கின்றது. மற்றொன்று பேரளத்திலிருந்து காரைக்காலுக்குச் செல்கின்றது. மாயவரத்திலிருந்து அறந்தாங்கிக்குச் செல்லும் இருப்புப்பாதையில் இச்சில்லாவிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள்: மாயவரம், மங்கநல்லூர், பேரளம், பூந்தோட்டம், நன்னிலம், வெட்டாறு, திருவாலூர், திருத்துறைப்பூண்டி, பாண்டி, தில்லைவிளாகம், முத்துப்பேட்டை, அதிராம்பட்டணம், பட்டுக்கோட்டை, பண்ணைவாயல், அய்யங்குடி, அறந்தாங்கி என்பவைகளாம்.

இனி, பேரளத்திலிருந்து காரைக்காலுக்குப் போகும் இருப்புப்பாதையில் இச்சில்லாவிலுள்ள முக்கிய ஸ்டேஷன்கள்:—பேரளம், அம்பகரத்தூர், போரையார்ரோட், காரைக்கால் என்பவைகளாம்.

இச்சில்லாவில் இருப்புப்பாதைகள் சந்திக்குமிடங்கள்: மாயவரம், தஞ்சாவூர், திருவாலூர், பேரளம் என்பவைகளாம்.

இன்னும் இச்சில்லாவின் கடற்கரையடுத்த பிரதேசங்களில் கால்வாய்கள் மூலமாய்ப் போக்குவரவு நடக்கின்றது.

இச்சில்லாவின் கடற்கரையோரங்களில் சமுத்திர நீர் ஆழமில்லாமலிருப்பதால், கப்பல்கள் கரையிலிருந்து சுமார் 4 அல்லது 5 மைல் தூரத்துக்கப்பால் சமுத்திரத்தில் நிற்கின்றன. ஆதலால் சாமான்களெல்லாம் படவுகள் மூலமாய்க் கொண்டுபோகப்பட்டுக் கப்பலில் ஏற்றப்படுகின்றன. மேற்கூறிய காரணத்தால், இச்சில்லாவில் நல்ல துறைமுகங்களில்லை. ஆயினும் இச் சில்லாவிலுள்ள துறைமுகங்கள்: திருமுல்லைவாசல், தரங்கம்பாடி, நாகூர், நாகப்பட்டணம், கால்மீர்முனை, முத்துப்பேட்டை, அதிராம்பட்டணம் என்பனவைகளாம்.

## அரசாட்சி.

வெகுகாலத்துக்கு முன் இச் சில்லாவை, சோழர்கள் என்னும் அரசர்கள் ஆண்டுவந்தனர். அவர்களுக்குத் தஞ்சாவூர், காவேரிப்பூம்பட்டினம், உறையூர் என்ற இந்த மூன்று இடங்களும் இராஜதானிகளாயிருந்தன. இவர்கள் காலத்தில், பாண்டியர்கள் என்னும் அரசர்கள் அதிக பலசாலிகளாய் மதுரையில் அரசாண்டுவந்தனர். இன்னும் அக்காலத்தில் மேல்நாட்டில் சேரர்கள் என்னும் அரசர்கள் அரசாண்டு வந்தனர். இந்த மூன்று அரசர்களும், அடிக்கடி சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

இச் சில்லாவில் ஆண்ட சோழர்கள், மிகவும் நாகரீகம் உள்ளவர்கள். அவர்கள், பல அரண்மனைகளையும், தேவாலயங்களையும், நீர்ப்பாய்ச்சலுக்காக பல அணைக்கட்டுகளையும் ஏற்படுத்தினர். சோழ அரசர்களில் முக்கியமானவர்கள், சோழன் கரிகாலன், ராஜராஜசோழர் என்றவர்கள். இவர்களுள் சோழன் கரிகாலன் என்பவர், கி. பி. முதலாவது நூற்றாண்டில் அரசாண்டார். இவர் பாண்டிய அரசர்களையும், சேர அரசர்களையும் ஜெயித்து அரசாண்டார்.

ராஜராஜ சோழர், கி. பி. பத்தாவது நூற்றாண்டில் அரசாண்டார். இப்பொழுது தஞ்சாவூரிலிருக்கும் பிரகதீச்வரர் கோயிலை கட்டினவர் இவரே. அப்பால், பாண்டிய அரசர்கள் சோழராஜர்களை ஜயித்து, இச் சில்லாவைக் கொஞ்ச காலம் ஆண்டார்கள். அப்பால், அப் பாண்டிய அரசர்கள், மகம்மதியரால் ஜயிக்கப்பட்டார்கள். அம் மகம்மதியர்களுக் கப்பால், விஜயநகரத்து அரசவம்சத்தைச் சேர்ந்த நாயக்கர் என்னும் அரசர்கள், இச்சில்லாவை ஆண்டார்கள். அவர்களுள் முக்கியமானவர், ரகுநாதநாயக்கர் என்பவர். இவர் பல விஷ்ணு ஆலயங்களையும் பல சத்திரங்களையும் கட்டினார்.

இந்த நாயக்கர்களுக்கப்பால், மகாராஷ்டிரர்கள், இச் சில்லாவை அரசாண்டார்கள். இச் சில்லாவில் அரசாண்ட மகாராஷ்டிர அரசர்களில் முதல்வர், வேங்காஜி என்பவர். இவர், மகாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்தவரான, சிவாஜி என்பவரின் சகோதரர். இச் சில்லாவை அரசாண்ட மகாராஷ்டிர அரசர்களில், கடைசி அரசர், சரபோஜி என்பவர். இச் சில்லாவை ஆண்ட மகாராஷ்டிர அரசர்களின் படங்களையும் சிலைகளையும் தஞ்சாவூர் அரண்மனையில் இப்பொழுதும் காணலாம். இந்த மகாராஷ்டிர அரசர்களின் ஆட்சிக்குப் பிறகு, இச் சில்லாவானது, ஆங்கிலேய துரைத்தனத்தாருடைய அரசாட்சிக்கு உட்பட்டது.

ஆங்கிலேய இராஜாங்கத்தார் இராச்சிய பரிபாலனம் சுலபமாய் நடக்கும்பொருட்டு, இச் சென்னை ராஜதானியைக் கெஞ்சம், விசாகப்பட்டணம் முதலிய 25 ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு ஜில்லாவையும் சில டிவிஷன்களாகவும், ஒவ்வொரு டிவிஷனையும் சில தாலூக்காக்களாகவும் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு

ஜில்லாவும் ஒவ்வொரு கலெக்டருடைய ஆளுகைக்கு உட்பட்டது. கலெக்டர் என்றால் வரி வசூல்செய்பவர்என்பது பொருள். இவர் தன்னுடைய ஜில்லாவில் வரி வசூல் செய்கிறதுமல்லாமல், அச்சில்லாவிலுள்ள சகல ஆபீஸுகளின்மேல் அதிகாரமும் செலுத்தி வருகிறார். இவர் சென்னைக் கவர்னருக்கு உட்பட்டவர்.

இவ்வாறு ஜில்லாக்களைக் கலெக்டர்கள் ஆளுகிறது போல, டிவிஷன்களைச் சப்கலெக்டர்களாவது, ஹெட் அசிஸ்டெண்ட் கலெக்டர்களாவது, டிப்யுடி கலெக்டர்களாவது கலெக்டருடைய அதிகாரத்துக்கு உட்பட்டு ஆண்டு வருகின்றார்கள். இவ்வாறே தாலூக்காக்களைத் தாசீல்தாரர்களும், கிராமங்களை கிராம முனிசீப்புகளும், மேற்கூறிய அதிகாரிகளின் அதிகாரத்துக்கு உட்பட்டு ஆண்டு வருகிறார்கள்.

இவ்வாறே ஜில்லாஜட்ஜ், சப்ஜட்ஜ், ஜில்லா முனிசீப், கிராம முனிசீப் என்றவர்களால் நியாயவிசாரணை நடத்தப்பட்டு வருகின்றது. ஜில்லா பந்தோபஸ்துக்காக போலீஸ் அதிகாரிகளும் ஏற்பட்டிருக்கின்றனர்.

## இச்சில்லாவின் பிரிவுகள்.

இச்சில்லாவானது, சீர்காழி, மாயவரம், நாகப்பட்டணம், திருத்துரைப்பூண்டி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, தஞ்சாவூர், பாபநாசம், கும்பகோணம், நன்னிலம், மன்னார்குடி என்ற பதினொறு தாலூக்காக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுள் முதலில் கூறிய ஆறு தாலூக்காக்கள் கடற்கரையை யடுத்துள்ளன. மற்றவை உள்நாட்டுத் தாலூக்காக்கள்.

## 1. தஞ்சாவூர் ஜில்லா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் கொள்ளிடம் நதியும், பாபநாசம் தாலூக்காவும், கிழக்கில் மன்னார்குடித் தாலூக்காவும், தெற்கில் பட்டுக்கோட்டைத் தாலூக்காவும், புதுக்கோட்டை ராஜ்யமும், மேற்கில் புதுக்கோட்டை ராஜ்யமும், திருச்சினாப்பள்ளி ஜில்லாவும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இத் தாலூக்காவின் வடபாகமும் கீழ்பாகமும் மிகவும் செழிப்புள்ளவை. மற்றப்பாகங்கள் மணற்பாங்காயிருக்கின்றன. இத்தாலூக்காவின் மேற்கில் காவேரி நதியானது, மூன்று பிரிவுகளாகப் பிரிகின்றது. அதன் வடகிழக்குப் பிரிவுக்குக் கொள்ளிடம் என்றும், மத்திய பிரிவுக்குக் காவேரி என்றும், தென்பிரிவுக்கு விண்ணாறு என்றும் பெயர். இத் தாலூக்காவில் காவேரி, விண்ணாறு, வெட்டாறு, குடமுருட்டி என்ற நதிகள் பாய்கின்றன. இதில் நெல், சோளம், மா, வெற்றிலை, வாழை முதலியவை விசேஷமாய்ப் பயிராகின்றன.

முக்கிய ஸ்தலங்கள்:—

தஞ்சாவூர்: இது இச் சில்லாவின் முக்கியபட்டணம். இது நெட்டி வேலைகளுக்கும், பட்டுத் துணிகளுக்கும், வீணை, தம்பூரு முதலிய வாத்தியங்களுக்கும், அத்தர், ஊதுவர்த்தி, சந்தனம் முதலிய வாசனைத் திரவியங்களுக்கும், கொடைமிளகாய்க்கும், அப்ரகத்தால் செய்யப்பட்ட விசிறிமுதலிய சாமான்களுக்கும் பேர்பெற்றது. இதிலுள்ள பிரஹதீச்வரர் கோவில் மிகவும் பிரசித்தி பெற்றது. இக்கோவிலிலுள்ள நந்தி மிகவும் பெரிது. பார்ப்பதற்கு மிகவும் அழகானது. இக்கோவிலுக்கு வடபுறத்தில் குளம் ஒன்று உண்டு. அதற்குச் சிவகங்கை என்று பெயர். அக்குளத்தின்

ஜலம் மிகவும் உருசியாயிருக்கும் இந்தத் தஞ்சாவூர் பட்டணத்துக்கு விண்ணாற்றிலிருந்து குழாய் மூலமாய்க் குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டு வரப்படுகின்றது. இதில் பழைய அரண்மனை யொன்றிருக்கின்றது. இதில் மகாராஷ்டிரர்கள் விசேஷம். இது ஒரு பெரிய ரயில்வே ஜங்ஷன்.

**வல்லம்.** இது தஞ்சாவூருக்குத் தெற்கில் 6-மைல் தூரத்திலுள்ளது. இது, ஒரு சௌக்கியமான இடம். இச் சில்லாக் கலெக்டர், வருஷத்தில் அநேக மாதங்களில் இங்கு வசிக்கின்றார். இன்னும் இது, மூக்குக் கண்ணாடிக் கல்லுக்குப் பேர்பெற்றது. இதிலுள்ள குளத்துக்கு வச்சிர தீர்த்தம் என்று பெயர். நோயாளிகள் தங்கள் நோய்களைப் போக்கிக் கொள்வதற்காக, இக்குளத்தில் ஸ்நானம் செய்ய வருவதுண்டு. இன்னும் இதில் துவரை, நிலக்கடலை, பருத்தி விசேஷம்.

**திருவையாறு:** இது தஞ்சாவூருக்கு வடக்கே 7-மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இது காவேரி நதிக்கரையிலுள்ளது. இதில் பல அன்னசத்திரங்களுண்டு. இதில் முனிசிப்கோர்ட்டும், தாசில்தார் கச்சேரியும், ஒரு ஹைஸ்கூலும் ஸம்ஸ்கிருத கலாசாலையும் உண்டு. இது சிறந்த சிவக்ஷேத்திரமாதலால், இதற்குப் பூலோக கைலாஸம் என்றும் சொல்வதுண்டு. இங்கு ஐந்து நதிகள் ஓடுகிறபடியால், இதற்குப் பஞ்சநதக்ஷேத்திரம் என்றும், தக்ஷிண காசி என்றும் சொல்வதுண்டு. இவ்வூரில் நடக்கும் ஸப்தஸ்தான உற்சவம் மிகவும் பிரசித்தி பெற்றது.

**திருக்காட்டுப்பள்ளி:** இவ்விடத்தில் குடமுருட்டியாறு காவேரியிலிருந்து பிரிகின்றது. இங்கு ஒரு ஹைஸ்கூல் உண்டு. இது சந்தைக்குப் பேர் பெற்றது.

ஒரத்தநாடு: இது தஞ்சாவூருக்குத் தென்கிழக்கே 15 மைல் தூரத்திலுள்ளது, இதில் தஞ்சாவூர் ராஜாவின் அன்னசத்திர மொன்றிருக்கின்றது. இங்கு நெல் வியாபாரம் அதிகம். இன்னும் இது, மாட்டுச் சந்தைக்குப்பேர்பெற்றது.

பூதலூர், ஆலக்குடி, வடவாறு, திட்டை, மாரியம்மன் கோவில் என்றவைகள், இத் தாலூக்காவிலுள்ள இதா இருப்புப்பாதை ஸ்டேஷன்கள்.

கந்தர்வகோட்டை: இது ஒரு ஜமீன் கிராமம். இது கம்பளத்துக்குப் பேர்பெற்றது.

கண்டியூர்: இது தஞ்சாவூருக்கும், திருவையாறுக்கும் இடையிலுள்ளது. இது சரித்திர சம்பந்தமாய்ப் பெயர் பெற்ற இடம்.

கோவிலடி: இது தஞ்சாவூருக்கு வடமேற்கிலுள்ளது. இதற்குச் சமீபத்தில் விண்ணாறு காவேரியினின்று பிரிகின்றது.

---

## 2. பாபநாசம் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் கும்பகோணம் தாலூக்காவும், கிழக்கில் நன்னிலம், மன்னார்குடித் தாலூக்காக்களும், தெற்கில் மன்னார்குடி, தஞ்சாவூர் தாலூக்காக்களும், மேற்கில் தஞ்சாவூர், கும்பகோணம் தாலூக்காக்களும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இத் தாலூக்கா புதிதாக ஏற்பட்டது. இதில் நீர்வளமும், நிலவளமும் பொருந்தியிருப்பதால், இது மிகவும் செழிப்புள்ளது. இதில், விண்ணாறு, வெட்டாறு, திருமலைராஜன், முடிகொண்டான், அரசலாறு, குடமுருட்டியாறு என்பவைகள் ஓடுகின்றன. இதில் நெல், சோளம், வாழை, வெற்றிலை முதலியன விசேஷம்.

முக்கிய ஸ்தலங்கள்:—

பாபநாசம்: இது இத் தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இதில் ஒரு ஹைஸ்கூல் இருக்கின்றது. இது ஒரு விஷ்ணுஸ்தலம்.

அய்யம்பேட்டை: இதுவும் ஒரு ரயில்வே ஸ்டேஷன். இது கோரைப்பாய்க்கும், துணிக்கும் பேர்பெற்றது.

ராஜகிரி: இது பாபநாசத்துக்கு 4-மைல் தூரத்திலுள்ளது. இது வெற்றிலைக்குப் பேர்பெற்றது. இது ஒரு மகம்மதிய கிராமம்.

சாலியமங்கலம், அம்மாபேட்டை, பசுபதிகோவில், பண்டாரவாடை என்பவை இத் தாலூக்காவிலுள்ள இதர ரயில்வே ஸ்டேஷன்கள்.

கபிஸ்தலம், உமையாள்புரம், உத்தமதானபுரம், கணபதி,அக்கிரஹாரம் என்பவை, இத் தாலூக்காவிலுள்ள இதர முக்கிய கிராமங்கள்.

---

## 3. கும்பகோணம் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் கொள்ளிடம் நதியும், கிழக்கில் மாயவரம், நன்னிலம் என்ற தாலூக்காக்களும், தெற்கில் பாபநாசம் தாலூக்காவும், மேற்கில் கொள்ளிடம் நதியும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இது செழிப்புள்ளதும், ஜென நெருக்கமுள்ளதுமான தாலூக்கா. இதில் பிராம்மணர்கள் விசேஷம். இதில் காவேரி, அரசலாறு, குடமுருட்டி, திருமலைராஜன், முடிகொண்டான், வீரசோழன் என்ற நதிகள் ஓடுகின்றன. இதில் நெல், வெற்றிலை, வாழை, புகையிலை முதலியன விசேஷம்.

முக்கிய ஸ்தலங்கள்:—

கும்பகோணம்: இது இத் தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். இது ஒரு முனிசிபல்டவுன். இது ஈயப்பாத்திரங்களுக்கும், பித்தளே, வெள்ளிப்பாத்திரங்களுக்கும், வெற்றிலேக்கும், பட்டாடை களுக்கும் பெயர்பெற்றது. இதில் பி. ஏ. வரைக்கும் படிப் புக்கும் சர்க்கார் கலாசாலே யொன்றிருக்கின்றது. இதில் பல தேவாலயங்கள் இருக்கின்றன. இதில் 12 வருஷங்க ளுக்கு ஒருமுறை மாசிமாதம் மகாமகம் உத்ஸவம் கொண் டாடப்படுகிறது. இதற்குப் பல விடங்களிலிருந்து ஏராள மான ஜனங்கள்வந்து கூடுவதுண்டு. இதில் போர்டர் டவுன்ஹால் என்னும் சபாமண்டப மொன்றிருக்கின்றது. இதில் சங்கராசாரியார் மடமொன்றிருக்கின்றது. இதற்குத் திருக்குடந்தை யென்றும் பெயர்.

திருவிடைமருதூர்: இது கும்பகோணத்துக்குக் கிழக் கில் 6 மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த சிவஸ் தலம். இதற்கு மத்தியார்ச்சுனம் என்றும் பெயர். இங்கு நடக்கும் புஷ்யோத்ஸவம் மிகவும் பிரசித்திபெற்றது. இங்கு ஒரு லோயர் செக்கண்டரி ஸ்கூல் உண்டு.

வலங்கிமான்: இது கும்பகோணத்துக்கு 5 மைல் தூரத்திலுள்ளது. இது புடவைகளுக்குப் பிரசித்தி பெற் றது.

திருநாகேச்வரம்: இது கும்பகோணத்துக்குக் கிழக் கில் 3 மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த சிவஸ் தலம். இது பருத்தி நூல் வஸ்திரங்களுக்குப் பெயர் பெற்றது.

திருப்பனந்தாள்: இது கும்பகோணத்துக்கு வடக்கில் 10 மைல் தூரத்திலுள்ளது. இங்கு சிறந்த சைவமடமொன்

றுண்டு. இம்மடம் முன்பு ஸ்ரீ குமரகுருபரஸ்வாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டது.

உப்பிலியப்பன்கோவில்: இது திருநாகேச்வரத்துக்குச் சமீபத்திலுள்ளது. இது ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம். இங்குள்ள பெருமாளுக்கு உப்பில்லாமலே நைவேத்தியங்கள் செய்யப்படுகின்றன.

நாச்சியார்கோவில்: இது கும்பகோணத்துக்குத் தென்கிழக்கில் 6 மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம். இது வெண்கலப் பாத்திரங்களுக்கும், பித்தளைப் பாத்திரங்களுக்கும் பெயர் பெற்றது.

ஸ்வாமிமலை: இது கும்பகோணத்துக்கு 3 மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த சுப்பிரமணியஸ்தலம். சுந்தரப்பெருமாள் கோயில், திப்பிராஜபுரம், நரசிங்கம் பேட்டை என்பவைகள், இத் தாலூக்காவிலுள்ள மற்ற முக்கிய கிராமங்கள்.

---

## 4. மாயவரம் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் கொள்ளிடம் நதியும், சீர்காழித்தாலூக்காவும் கிழக்கில் வங்காளக்குடாக்கடலும், தெற்கில் நன்னிலம், கும்பகோணம் தாலூக்காக்களும், மேற்கில் கொள்ளிடம் நதியும் எல்லைகளாய் அமைந்துள்ளன. இது மிகவும் செழிப்பான தாலூக்கா. இதில் காவேரி, வீரசோழன் என்ற நதிகள் ஓடுகின்றன. இதில் நெல், வாழை, புகையிலை, வெற்றிலை, எள்ளு முதலியன விசேஷமாய்ப் பயிராகின்றன.

முக்கிய ஸ்தலங்கள்:—

மாயவரம்: இது இத் தாலூக்காவின் முக்கியபட்டணம். இது ஒரு முனிசிபல் டவுன். இது காவேரியாற்

றின் கரையிலிருக்கின்றது. இது ஒரு சிறந்த 'சிவஸ்தலம். ஐப்பசி மாதத்தில் இங்குள்ள காவேரி நதியில் ஸ்நானம் செய்வதற்கு ஏராளமான ஜனங்கள் வருவதுண்டு. இது ஒரு ரெயில்வே ஜங்ஷன். இங்கு ஒரு ஹைஸ்கூல் உண்டு. இதைச் சேர்ந்த ஒரு பாகமாகிய குறநாட்டில் விலையுயர்ந்த பட்டுப் புடவைகள் நெய்யப்படுகின்றன.

தேரழுந்தூர்: இது மாயவரத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு விஷ்ணுஸ்தலம்.

தர்மபுரம்: இது மாயவரத்துக்கு 2 மைல் தூரத்திலுள்ளது. இங்கு சிறந்த சைவமடம் ஒன்றிருக்கின்றது. இம்மடத்துத் தலைவருக்கும், அவருடைய சிஷ்யர்களுக்கும் தம்பிரான்கள் எனப் பெயர்.

குறுக்கை: இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இது, சிவபெருமான் மன்மதனைத் தமது நெற்றிக்கண்ணால் எரித்த இடம்.

திருவாடுதுறை: இது மாயவரத்துக்கு மேற்கில் 10 மைல் தூரத்திலுள்ளது. இங்கு ஒரு சிறந்த சைவமடம் உண்டு. இம் மடாதிபதிக்கு பண்டாரசன்னதி யெனப் பெயர்.

தரங்கம்பாடி: இது ஒரு துறைமுகப் பட்டணம். இங்கு அழிந்துபோன பழைய கோட்டையொன்று இருக்கின்றது. இது பாய்களுக்கும், வஸ்திரங்களுக்கும் பெயர் பெற்றது. இதற்குச் சமீபத்திலுள்ள பொறையார் என்னுமிடத்தில் ஒரு ஹைஸ்கூல் இருக்கின்றது.

குற்றாலம்: இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இது சிறந்த பட்டுப்புடவைகளுக்குப் பெயர்பெற்றது.

திருக்கடையூர், திருவாலங்காடு: இவை இத்தாலூக்காவிலுள்ள சிறந்த சிவஸ்தலங்கள்.

மல்லியம், ஆனைதாண்டவபுரம்: இவை இத்தாலூக்காவிலுள்ள இதர முக்கிய கிராமங்கள்.

ஆனைதாண்டவபுரம், மாயவரம், மல்லியம், குற்றாலம் என்பவை இத்தாலூக்காவிலுள்ள ரயில்வேஸ்டேஷன்கள்.

---

## 5. சீர்காழித் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் கொள்ளிடமும், கிழக்கில் வங்காளக்குடாக்கடலும், தெற்கில் மாயவரம் தாலூக்காவும், மேற்கில் மாயவரம் தாலூக்காவும் , கொள்ளிடமும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இது இச் சில்லாவின் வடகோடியிலுள்ளது. இது கடற்கரையடுத்த தாலூக்கா. இதில் நஞ்சைகள் விசேஷம். இதில் உப்பளங்களும் சில உண்டு. இதிலுள்ள காட்டுப்பிரதேசமாகிய வேட்டான்குடியில் பழங்கள் கொடுக்கும் மரங்கள் விசேஷம். இதில் காவேரியும், இன்னும் சில சிற்றாறுகளும் ஓடுகின்றன. இதில் நெல், கடலை, உப்பு முதலியன விசேஷம்.

முக்கிய ஸ்தலங்கள்:—

சீர்காழி: இது இத்தாலூக்காவின் முக்கியபட்டணம். இங்கு நெல் வியாபாரம் அதிகம். இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இது திருஞானசம்பந்தமூர்த்தி அவதரித்த ஸ்தலம். இதில் இரண்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன.

திருமுல்லைவாசல்: இது ஒரு துறைமுகப்பட்டணம். இங்கிருந்து நெல் விசேஷமாய் ஏற்றுமதியாகின்றது.

வைதீச்வரன் கோவில்: இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன்.

நெய்தவாசல்: இது உப்பளத்துக்குப் பெயர்பெற்றது.

திருநகரி: இது ஒரு விஷ்ணு ஸ்தலம். இது திருமங்கையாழ்வார் அவதரித்த ஸ்தலம்.

திருமலவாடி: இது கோரைப் பாய்களுக்குப் பேர் பெற்றது.

தீவுக்கோட்டை: இங்கு கொள்ளிடம் சமுத்திர சங்கமமாகின்றது.

திருநாங்கூர்: இது ஒரு விஷ்ணு ஸ்தலம்.

காவேரிப்பூம்பட்டினம்: இது பழைய சோழராஜர்களுக்கு இராஜதானியாயிருந்தது. இங்குக் காவேரி சமுத்திர சங்கமமாகின்றது. இது இரண்டு பாகங்களை உடையது. கடற்கரை யடுத்த பாகத்துக்கு மரூர்ப்பாக்கம் என்றும், மற்றொரு பாகத்துக்கு பட்டினம்பாக்கம் என்றும் பெயர்.

பட்டினம் பாக்கத்தில் தான் சோழ அரசர்களுடைய அரண்மனை யிருந்தது. இப்பொழுது இக் காவேரிப்பூம்பட்டினத்தில் செம்படவர்களே விசேஷம். ஆயினும், இது காவேரி சமுத்திரசங்கமமாகுமிடமாதலால், இங்கு ஸ்நானம் செய்வதற்கு ஏராளமாய் ஜனங்கள் வருகின்றார்கள். இன்னும் இது பட்டணத்துப் பிள்ளையார் பிறந்த இடம்.

ஆச்சாள்புரம், ஆனைக்காரன் சத்திரம் என்றவைகள், இத் தாலூக்காவிலுள்ள இதர முக்கியமான கிராமங்கள்.

## 6. நாகப்பட்டணம் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் நன்னிலம் தாலூக்காவும், காரைக்காலும், கிழக்கில் வங்காள குடாக்கடலும், தெற்கில் திருத்துரைப்பூண்டி, மன்னார்குடித் தாலூக்காக்களும், மேற்கில் மன்னார்குடி, நன்னிலம் தாலூக்காக்களும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இதன் கீழ்ப்பாகமும், தென்பாகமும் மணற்பாங்கானவை. இது கடற்கரை யோரமாயுள்ளது. இதில் உப்பளங்

 225590

கள் விசேஷம். இதில் வெட்டாறும், இன்னும் சில சிற்றாறு களும் செல்லுகின்றன. இதில் நெல், சோளம், உப்பு, பனை, தெங்கு முதலியன விசேஷமாய்ப் பயிராகின்றன.

முக்கிய ஸ்தலங்கள்:—

நாகப்பட்டணம்: இது இத் தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது ஒரு முனிசிபல் டவுன். இது ஒரு துறை முகப்பட்டணம். இதில் தென் இந்தியா இருப்புப்பாதை கம்பெனியாரின் ஓர்க் ஷாப் (வண்டிவேலை செய்யுமிடம்) இருக்கின்றது. அதில் சற்றேறக்குறைய 4000-ஜனங்கள் வேலைசெய்கிறார்கள். இப்பட்டணத்தின் கடலோரத்தில் மாலுமிகளுக்கு அனுகூலமாக தீபஸ்தம்ப மொன்று அமைக் கப்பட்டிருக்கின்றது.

நாகூர்: இது நாகப்பட்டணத்துக்கு 3-மைல் தூரத்தி லிருக்கின்றது. இதில் சிறந்த மீராசாயபு கோவில் இருக் கின்றது. இங்கு நடக்கும் கந்தரி உத்ஸவம் மிகவும் பிர சித்திபெற்றது. இது மகம்மதியர்கள் நிறைந்த இடம். இங்கு தஞ்சாவூரிலிருந்து வரும் இருப்புப்பாதைக் கிளை முடிவு பெறுகின்றது. இங்கு இரண்டு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன.

திருவாரூர்: இது ஒரு ரெயில்வே ஜங்ஷன். இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இங்குள்ள குளத்துக்கு கமலாலயம் என்று பெயர். இங்கு அரிசி யந்திரசாலை யொன்று இருக் கின்றது. இங்கு ஒரு ஹைஸ்கூல் உண்டு.

வேளாங்கண்ணி: இது நாகப்பட்டணத்துக்கு மேற் கில் 6-மைல் தூரத்திலுள்ளது. இது ரோமன்காதலிக் கிறிஸ் தவர்களுக்கு யாத்திரை ஸ்தலம்.

நாகூர், வெளிப்பாளையம், நாகப்பட்டணம், சிக்கில், கீவலூர், அடியக்கமங்கலம், கூத்தூர், திருவாரூர், திருநாட்டி யத்தான்குடி என்பவை, இத்தாலூக்காவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள்.

TB

## 7. நன்னிலம் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் மாயவரம் தாலூக்காவும், கிழக்கில் வங்காளக்குடாக்கடலும், நாகப்பட்டணம் தாலூக்காவும், தெற்கில் நாகப்பட்டணம், மன்னார்குடித் தாலூக்காக்களும், மேற்கில் பாபநாசம், கும்பகோணம் என்ற தாலூக்காக்களும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இது நீர்வளமும், நிலவளமும் பொருந்திய தாலூக்கா. இதில் அரசலாறு, திருமலைராஜன், நாட்டான் கால்வாய், வெட்டாறு, முடிகொண்டான், வளப்பாறு முதலியன ஓடுகின்றன. இதில் நெல், சோளம், வாழை, எலுமிச்சை, புகையிலை, தெங்கு முதலியன விசேஷம்.

முக்கிய ஸ்தலங்கள்:—

நன்னிலம்: இது இத் தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது ஒரு ரயில்வே ஸ்டேஷன். இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இதன் கோயிலினுள்ள ஸ்வாமிக்கு மதுவனேச்வரர் என்று பெயர். இங்குள்ள கோயிலில் சில தேன்கூடுகளைப் பார்க்கலாம்.

கோடவாசல்: இதில் தென்னந்தோப்புக்கள் விசேஷமாதலால், தேங்காய் வியாபாரம் அதிகம்.

ஸ்ரீவாஞ்சியம்: இது நன்னிலத்திலிருந்து 7-மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இங்குள்ள தடாகத்தில் ஸ்நானஞ் செய்பவர்களுக்கு மரணகாலத்தில் யமபாதை யில்லை யென்கிறார்கள்.

எண்கண்: இது ஒரு சிறந்த சுப்பிரமணிய ஸ்தலம். திருக்கண்ணபுரம், திருக்கண்ணமங்கை இவை சிறந்த விஷ்ணு ஸ்தலங்கள்.

திருப்புகலூர்: இது ஒரு சிறந்த சிவக்ஷேத்திரம்.

பேரளம்: இங்கிருந்து காரைக்காலுக்கு ஒரு இருப்புப்பாதைக் கிளைபோகின்றது.

பேரளம், பூந்தோட்டம், நன்னிலம், வெட்டாறு, கொரடாச்சேரி, குழிக்கரை என்பவை, இத் தாலூக்காவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள்.

ஏனங்குடி, தீபங்குடி என்பவை இத் தாலூக்காவிலுள்ள மற்ற முக்கிய கிராமங்கள். இதில் தீபங்குடி என்பது ஜயினர் ஸ்தலம்.

## 8. திருத்துறைப்பூண்டித் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் நாகப்பட்டணம் தாலூக்காவும், கிழக்கில் வங்காளக்குடாக்கடலும், தெற்கில் பாக்ஸ்ஜலசந்தியும், மேற்கில் பட்டுக்கோட்டை, மன்னார்குடித் தாலூக்காக்களும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இதன் தென்பாகத்தில் உப்பளங்கள் விசேஷம். இதில் காட்டுப்பிரதேசங்கள் அதிகம். இதிலுள்ள காடுகளுக்குக் கோடியாக்காடு என்று பெயர். இத் தாலூக்காவின் தென்கிழக்குமூலைக்குக் கால்மீர்முனை என்று பெயர். இதற்குக் கோடிக்கரை என்றும் பெயர் கூறுவது முண்டு. இதில் ஸ்நானம் செய்வதற்கு, ஜனங்கள் ஏராளமாய் வருவதுண்டு. இத் தாலூக்காவிலுள்ள வேதாரண்யத்திலிருந்து நாகப்பட்டணத்துக்கு ஒரு உப்புக்கழிக்கால்வாய் செல்கின்றது. இதில் முள்ளியாறு, கோரையாறு, அரிச்சந்திரனாறு என்பவைகள் செல்கின்றன. இதில், நெல், கேழ்வரகு, கம்பு, உப்பு, இலந்தை, இலுப்பை, பனை முதலியன விசேஷம்.

முக்கிய ஸ்தலங்கள்:—

திருத்துறைப்பூண்டி: இது இத்தாலூக்காவின் முக்கியபட்டணம். இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இங்கு வில்வ

மரங்கள் விசேஷமாதலால், இதற்கு வில்வவனம் என்றும் பெயர் கூறுவதுண்டு. இங்கு நெல் வியாபாரம் அதிகம்.

வேதாரண்யம்: இது ஒரு சிறந்த சிவஸ்தலம். ஸ்ரீராமர், இலங்கைக்குப் போவதற்குமுன், இங்குச் சிலகாலம் வசித்ததாகச் சொல்லுகிறார்கள். இது புகையிலைக்குப் பேர்பெற்றது. இங்கு உப்பளம் ஒன்று இருக்கின்றது. இங்கிருந்து ஒரு உப்புக்கழி நாகப்பட்டணம்வரையில் செல்கின்றது. இதைச்சேர்ந்த தோப்புத்துறை ஒரு துறைமுகம். அதிலிருந்து நெல்லும் அரிசியும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வேதாரண்யத்துக்குச் சமீபத்தில் அகஸ்தியர்பள்ளி என்னும் கிராமத்தில் அகஸ்தியர்பெயரால் ஒரு ஆலயமிருக்கின்றது. வேதாரண்யத்தில், மரக்காயர்கள் என்னும் மகம்மதிய வியாபாரிகள் விசேஷம்.

முத்துப்பேட்டை: இங்கிருந்து நெல் ஏற்றுமதியாகின்றது. இது ஒரு ரயில்வேஸ்டேஷன்.

கால்மீர்முனை: இதற்குக் கோடிக்கரை யென்றும் பெயர். இங்குப் புண்யதினங்களில் ஸ்நானஞ் செய்வதற்காக, ஏராளமான ஜனங்கள் வருவதுண்டு.

தில்லைவிளாகம்: இது ஒரு விஷ்ணுஸ்தலம்.

திருநெல்லிக்காவல், ஆலத்தம்பாடி, திருத்துரைப்பூண்டி, தில்லைவிளாகம், முத்துப்பேட்டை என்பவைகள் இத்தாலூக்காவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள்.

திட்டகுடி, மருதூர் என்பவைகள், இத் தாலூக்காவிலுள்ள மற்ற முக்கிய கிராமங்கள்.

## 9. மன்னார்குடித் தாலூக்கா.

எல்லைகள்:—இதற்கு வடக்கில் நன்னிலம், பாபநாசம் என்ற தாலூக்காக்களும், கிழக்கில் நாகப்பட்டணம், திருத் துறைப்பூண்டித் தாலூக்காக்களும், தெற்கில் திருத்துறைப் பூண்டி, பட்டுக்கோட்டைத் தாலூக்காக்களும், மேற்கில் பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் தாலூக்காக்களும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இது ஒரு உள்நாட்டுத் தாலூக்கா. இதன் மேல்பாகம் காட்டுப்பிரதேசம். இதில் விண்ணாறு, கோரையாறு, பாமணியாறு என்றவைகள் ஓடுகின்றன. இதில் நெல், எள்ளு, தெங்கு, பலா முதலியவைகள் பயிராகின்றன.

முக்கிய ஸ்தலங்கள்:—

மன்னார்குடி: இது இத் தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது பாமணியாற்றின் கரையிலிருக்கின்றது. இது ஒரு சிறந்த விஷ்ணுஸ்தலம். இதற்கு மன்னார்கோவில் என்றும், ராஜமன்னார்கோவில் என்றும் பெயர்கள் வழங்கும். இது ஒரு முனிசிபல் டவுன். இது செம்புப்பாத்திரங்களுக்கும், ஆடைகளுக்கும் பெயர்பெற்றது. இதில் பி. ஏ. வரைக்கும் படிப்பிக்கும் பின்டே காலேஜ் என்று ஒரு கலாசாலையும் 2 ஹைஸ்கூல்களும் இருக்கின்றன.

கூத்தாநல்லூர்: இது மன்னார்குடிக்கு வடகிழக்கில் 5-மைல் தூரத்திலுள்ளது. இது மகம்மதியர் நிறைந்த ஸ்தலம். இங்கு வெற்றிலை வியாபாரம் அதிகம்.

நீடாமங்கலம்: இது ரயில்வே ஜங்ஷன். இது மன்னார்குடிக்கு 8-மைல் தூரத்திலுள்ளது. இங்கிருந்து மன்னார்குடிக்கு இருப்புப்பாதைக்கிளை பிரிகின்றது. இங்கு அரிசி

யந்திரசாலைகள் இருக்கின்றன. இங்கு தஞ்சாவூர் ராஜா அன்னசத்திரம் இருக்கின்றது. இது ஒரு யூனியன்.

பெருகவாழ்ந்தான்: இது ஒரு சிறந்த சிவஸ்தலம். இங்கிருக்கும் கோவிலிலுள்ள அம்மனுக்கு அன்னபூரணி யென்று பெயர். இங்கு ஒரு ஸம்ஸ்கிருத கலாசாலை இருக்கின்றது.

நீடாமங்கலம், ராயப்பன்சாவடி, மன்னார்குடி என்பவைகள் இத்தாலூக்காவிலுள்ள ஸ்டேஷன்கள்.

## 10. பட்டுக்கோட்டைத் தாலூக்கா.

எல்லைகள்: இதற்கு வடக்கில் தஞ்சாவூர், மன்னார்குடித் தாலூக்காக்களும், கிழக்கில் மன்னார்குடித் தாலூக்காவும், திருத்துறைப்பூண்டித் தாலூக்காவும், தெற்கில் அறந்தாங்கித்தாலூக்காவும், வங்காளவிரிகுடாவும், மேற்கில் புதுக்கோட்டை ராஜ்யமும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இது காடுகள் நிறைந்த தாலூக்கா. இதில் ஆறுகள் விசேஷமாயில்லை. உப்பளங்கள் விசேஷம். இதில் வெள்ளாறு ஓடுகின்றது. இதில் புளி, மா, பலா முதலிய மரங்கள் விசேஷம். நிலக்கடலை விசேஷமாய்ப் பயிராகின்றது.

முக்கிய ஸ்தலங்கள்:—

பட்டுக்கோட்டை: இது இத் தாலூக்காவின் முக்கிய பட்டணம். இது ஒரு ரயில்வேஸ்டேஷன். இங்கு, பலாப் பலகையினால் பல சாமான்கள் செய்யப்படுகின்றன.

சாளுவநாயக்கன் பட்டணம்: இதற்குச் சரபோஜி ராஜன் பட்டணம் என்று பெயர் கூறுவதுண்டு. ஆங்கிலேயர், ப்ரெஞ்சு அரசனாகிய நெப்போலியனைத் தோற்கடித்ததைக் காண்பிக்கும்பொருட்டு, சரபோஜி மகாராஜா ஒரு கோபுரம் கட்டியிருக்கின்றார். அதில் 11 உப்பரிகைகள் இருக்கின்றன.

அதிராம்பட்டணம்: இதற்கு அதிவீரராம பட்டணம் என்று பெயர் கூறுவதுண்டு. இது பட்டுக்கோட்டைக்குத் தென்கிழக்கில் 7-மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு துறை முகப்பட்டணம். இதில் உப்பளங்கள் விசேஷம். இங்கு உப்பு, தேங்காய் வியாபாரம் அதிகம்.

பாபநாடு: இது ஒரு சிறிய ஜமீன் கிராமம்.

தம்பிக்கோட்டை: இதில் ஒரு உப்பளம் உண்டு.

பட்டுக்கோட்டை, சேதுபாவாசத்திரம், அம்மணி சத்திரம், ராஜாமடம் என்ற இடங்களில் அன்னசத்திரங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

தம்பிக்கோட்டை, அதிராமபட்டணம், பட்டுக்கோட்டை, பண்ணைவயல், திருச்சிற்றம்பலம், நிசாம்பூர், ஓட்டங்காடு, பேராஊரணி என்றவைகள் இத் தாலூக்காவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள்.

## 11. அறந்தாங்கித் தாலுக்கா.

எல்லைகள் :— இதற்கு வடக்கில் பட்டுக்கோட்டைத் தாலுக்காவும், கிழக்கில் வங்காளவிரிகுடாவும், தெற்கில் மதுரை ஜில்லாவும், மேற்கில் புதுக்கோட்டை ராஜ்யமும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

இது காடடர்ந்த தாலுக்கா. இது முன்பு பட்டுக்கோட்டைத் தாலூக்காவைச் சேர்ந்திருந்தது. இதில் நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய அனுகூலம் கிடையா. இதில் வெள்ளாறும், இன்னும் சில சிற்றாறுகளும் ஓடுகின்றன. இதில் கம்பு, கேழ்வரகு, உப்பு, அவுரி, மா, பலா, பனை முதலியன பயிராகின்றன.

முக்கிய ஸ்தலங்கள் :—

**அறந்தாங்கி:** இது இத் தாலூக்காவின் முக்கியபட்டணம். தஞ்சாவூர் ஜில்லா போர்ட்டு இருப்புப்பாதை இங்கு முடிவு பெறுகின்றது. இதில் பழைய கோட்டையொன்றுண்டு. இங்கு மகம்மதியர்களுக்கு உபயோகமான ஒருவித வஸ்திரம் நெய்யப்படுகின்றது.

**காட்டுமோவடி:** இங்கு ஒரு உப்பளம் உண்டு.

**மணமேல்குடி, மீன்புசல்** இவைகளில் தஞ்சாவூர் ராஜா சத்திரங்களிருக்கின்றன.

**ஆவடையார்கோவில்:** இது அறந்தாங்கிக்குத் தெற்கில் 8-மைல் தூரத்திலுள்ளது. இது ஒரு சிறந்த சிவஸ்தலம்.

**அறந்தாங்கி, ஐயங்குடி:** என்றவைகள், இத் தாலூக்காவிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள்.

**காரைக்கால்:** இது ப்ரெஞ்சுக்காரருக்குச் சொந்தமானது. இது நன்னிலம் தாலூக்காவின் கீழ்க்கரையிருக்கின்றது. இதற்குப் பேரளத்திலிருந்து தஞ்சாவூர் ஜில்லா போர்ட் இருப்புப்பாதைக் கிளையொன்று வருகின்றது. அக் கிளைக்கு பேரளம், **காரைக்கால்** இருப்புப்பாதை யென்று பெயர். இக் கிளையிலுள்ள ரயில்வே ஸ்டேஷன்கள், பேரளம், அம்பகரத்தூர், பத்தகுடி, திருநல்லார், புரையார்ரோட், காரைக்கால் என்பவைகள். இக் காரைக்கால் சற்றேறக்குறைய 63 சதுர மைலுள்ளது. இதில் அரசலாறு, திருமலைராஜன் என்ற நதிகள் ஓடுகின்றன. இதில் நெல் விசேஷமாய் விளைகின்றது. இங்கு நெல் வியாபாரம் அதிகம். துணி நெசவும் உண்டு.

TB
U.2l193
N24
225590